



"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 1 | ஞாயிறு 30-10-38 வெகுதான்ய ஹூ ஐப்பசிமீ 14உ | முத்து 5 |
|---|---|---|


# பொருள் அடக்கம்


| விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | புது சமஷ்டி | .... | 98 |
| 2. | குறிப்பு | ... | 99 |
| 3. | போகிற போக்கில் | ... | 101 |
| 4. | சிட்டை | ... | 103 |
| 5. | கூண்டுக்கிளி (கு. பா. வெங்கடாசலம்) | ... | 105 |
| 6. | கிராம சேவை | ... | 106 |
| 7. | துணுக்குகள் | ... | 109 |
| 8. | குழந்தை மனம் (சங்கரதாஸன்) | ... | 110 |
| 9. | வலை வீச்சு | ... | 113 |
| 10. | நீர் நாய் (தேவதத்தன்) | ... | 115 |
| 11. | சினிமாச் சுருள் | ... | 117 |
| 12. | முத்துஸ்வாமி தீக்ஷிதர் (என். சிதம்பர சுப்ரமண்யன்) | ... | 118 |
| 13. | சினிமா வேண்டுமா (வே. சு. ராமகிருஷ்ணன்) | ... | 120 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# ஒரு புது சமஷ்டி

இப்பொழுது மியூனிச்சில் பிரிட்டன் தன் சரித்திர கௌரவத்தை ஒரு ஆடைபோலக் களைந்து தூர வைத்துவிட்டு சர்வாதிகாரிகளுக்குப் பணிந்து போகும்படியான நிலைமை ஏற்பட்டதும் பிரிட்டிஷ் பிரதேசங்களில் ஒரு பெருத்த கலவரம் உண்டாகி இருக்கிறது.

சர்வாதிகாரிகள் ஒரே நிலையில் நின்று, தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொண்டு விட்டார்கள். ஆனால் ஜனநாயக நாடுகளான பிரிட்டன் பிரான்ஸ், இவைகளுக்குள் ஒற்றுமையும் ஒருமனப்பான்மையும் கட்டுப்பாடும் இல்லாததாலும், ரஷியாவுடன் சேரக்கூடாது என்ற எண்ணம் சிலசர்க்கார்களில் மேலோங்கியிருந்ததாலும் அவைதடுமாற்றமும் தயக்கமும் கொண்டு, யுத்தத்திற்கு அஞ்சி, எதிரிகளிடம் "சரணகதி" அடையவேண்டியதாயிற்று.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள்ளேயே வெளிநாட்டுக் கொள்கையைப்பற்றி ஏக மனதான அபிப்பிராயம் கிடையாது. சாம்ராஜ்யத்தின் அங்கங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி கொள்கை கொள்ள உரிமையுண்டு. பிரிட்டனிலேயே இருவித அபிப்பிராயம். இப்படியிருந்தால் சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சர்வாதிகாரிகளின் முன்பு இனிமேல் நிலையாக இருக்க முடியாது என்று அரசியல் வாதிகளுக்குப் பயமேற்பட்டிருக்கிறது.

ஸ்டேட்ஸ்மன் பத்திரிகாசிரியர் ஸ்ரீ ஆர்தர் மூர் இந்த ஆபத்தை விளக்கிக் காட்டி அதற்கு ஒரு பரிகாரமும் கூறுகிறார். பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்திற்குட்பட்ட நாடுகளெல்லாம் ஒரு அகில சாம்ராஜ்ய சமஷ்டியில் சேர்ந்து வெளிநாட்டுக் கொள்கைக்கு ஒரு திரண்ட உருவில் பலம் கொடுத்து நிற்கவேண்டும் என்கிறார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பூராவும் இப்படி ஒரு சமஷ்டி ஒப்பந்தத்தில் ஒற்றுமை கொண்டுவிட்டால் அதை எதிர்க்க எந்த வல்லரசாலும் முடியாது. ஜனநாயகம் தலையெடுத்துவிடும். சர்வாதிகாரிகள் கொட்டம் அடங்கும் என்கிறார்.

எல்லாம் வாஸ்தவம்தான். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒரு சமஷ்டியானால் உலக சமாதானத்திற்கு அது ஒரு பெரும்பலம் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் அந்த சமஷ்டியை எப்படிக் கூட்டுவது? காலனிகள் ஒரு ரகம்; டொமினியன்கள் ஒரு ரகம்; இந்தியா ஒரு ரகம்; பிரிட்டனே ஒரு தனி ரகம். இவ்வளவு விதமான நாடுகளை ஒரு சமஷ்டிக்குள் கொண்டு வருவதென்றால்?

சாம்ராஜ்யத்தில் நடுநாயக மணி எனப்படும் இந்தியா சுதந்தரமற்று இருக்கும்பொழுது சமஷ்டி எங்கிருந்து வரும்? சுதந்திரத்திற்கு உலை வைக்கும் ஒரு சமஷ்டியைப் பிரிட்டன் அதன்மீது சுமத்தவேண்டுமென்றல்லவாபார்க்கிறது? அதை விடுதலை நாடாக்க வேண்டுமென்ற எண்ணம் பிரிட்டனுக்கு உதயமாகாத வரையில் பிரிட்டனுக்கே இந்த கதிதான். தனக்குக் கைபாணமாக இருக்கக்கூடிய ஒரு பெரும் நாட்டைக் கட்டை விரலின் கீழ் அழுத்தி வைத்துக் கொண்டிருந்தால், பிரிட்டன் மேன்மேலும் எதிரிகளுக்குப் பணிந்து போய்க்கொண்டே இருக்க வேண்டியதுதான்.

# தன்வந்தரி ஜயந்தி

சென்ற வாரத்தில் தன்வந்தரி ஜயந்தி தினத்தை சில இடங்களில் கொண்டாடினர்கள். தன்வந்தரி ஆயுர்வேத வைத்திய முறையின் ஆதி புருஷர்களில் ஒருவர். ஆயுர்வேதத்தின் சிறப்பும் ஒளியும் மங்கியிருக்கிறபொழுது தன்வந்தரியைப்பற்றி யாருக்குத் தெரியப்போகிறது? மேல் நாட்டு வைத்திய முறையில் மோகங் கொண்டு கற்றுக்குட்டிகள் கொடுக்கும் மருந்துகளேயும் ஏற்றும் ஊசிகளேயும் பொறுத்துக்கொண்டு நாம் காசைக்கொட்டி மேலும் சில உபத்திரவங்களுக்கும் உள்ளாகிறோம். ஆயுர்வேதத்தில் நமக்கு நம்பிக்கை இல்லே.

மேல்நாட்டு முறையில் சஸ்திர சிகிச்சை மிகவும் திறமையான அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாது. நமது முறையிலும் சஸ்திர சிகிச்சை இருந்திருக்கிறது. ஆனல் எந்தக் காரணத்தாலோ அது க்ஷணமடைந்துவிட்டது. ஆயுர்வேதத்தில் சஸ்திர சிகிச்சையின்றியே சகலவியாதிகளுக்கும் பரிகாரம் செய்ய முயன்றிருக்கிறார்கள் என்பது ஒரு காரணமாக இருக்கலாம்.

மேல்நாட்டு முறையில் வியாதியை நிர்ணயம் செய்து அதன் அடிப்படையான காரணத்தை அகற்றுவது என்ற முயற்சியே கிடையாது. 'டயக்னோஸிஸ்' என்பது மேலே தென்படும் அடையாளங்களேக் கொண்டு வியாதியை ஊகிப்பது. அவைகளேச் சமனம் செய்வதற்கே டாக்டர்கள் மருந்தும் கொடுக்கிறார்கள். ஆனல் ஆயுர்வேத முறைப்படி மூலாதாரமான காரணங்களேக் கண்டு பிடித்துத்தான் வியாதி நிதானம் செய்கிறார்கள். ஆயுர்வேதத்தின் அடிப்படையான திரிதோஷக் கொள்கைப்படி வியாதி நிர்ணயம் மிகவும் நிச்சயமாய் இருக்கிறது.

ஆயுர்வேதமும் சித்தமுறையும் உயர்ந்த சிகிச்சை முறைகள் என்று சொல்வதற்காக வந்தோம். அவைக்கு மறுபடியும் ஆதரவு கொடுத்து புத்துயிர் அளிக்க வேண்டியது மிகவும் அவசியம். அவைகளின் மூலம் கைகண்ட முறையாக வியாதியும் சொஸ்தமாகிறது; சிலவும் குறைவு. தற்காலம் சில கற்றுக்குட்டிகள் அம் முறையைச் சரியாக கையாள வில்லேயென்றால் அது முறையின் பிசகில்லே; முறைக்கு ஆதரவு இல்லாமல் போனது தான் காரணம்.

ஆயுர்வேத பிரசார சபையின் தலைவர் டாக்டர் ஏ. லக்ஷ்மீபதி காங்கிரஸ் கமிட்டியாருக்கு விடுத்துள்ள அறிக்கையின் சாராம்சத்தை மனமாற ஆதரிக்கிறோம். அதில் அவர் கூறுவது போல காங்கிரஸ் சர்க்கார்கள் ஆயுர்வேத சித்த யுனனி முறைகளுக்கு ஆதரவளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாகபுரி காங்கிரஸில் நிறைவேறிய தீர்மானத்தைச் சென்ற ஜுலேயில் ஊர்ஜிதம்செய்து காரியக்கமிட்டி காங்கிரஸ் சர்க்கார்களுக்கு அதை நடைமுறையில் கொண்டுவரும்படி சிபாரிசு செய்திருக்கிறது.

சென்னே சர்க்கார் வேண்டிய ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறோம்.

* * *

## குடியேறற் நாடுகள்

டாக்டர் கொயபெல்ஸின் பிரசாரமுறை மிகவும் திறமையானதுதான் என்பதற்கு சமீப காலத்து நிகழ்ச்சிகள் ஒரு அத்தாட்சி. காலனிகள் பிரச்னே விஷயமாக ஜெர்மனி இன்னும் ஒன்றும் பகிரங்கமாகச் சொல்லவில்லே. ஹிட்லர் ஓரிடத்திலும், கொயரிங் ஓரிடத்திலும் கொயபெல்ஸ் ஓரிடத்திலுமாக சூசனேயாக ஓரிரண்டு வார்த்தைகள் தான் பேசியிருக்கிறார்கள். "இதுதான்நான் ஐரோப்பாவில் கேட்கும்கடைசிப் பிரதேசம்'' என்று ஹிட்லர் ஜெக் ஆக்கிரமிப்பின்போது சொன்னர். கர்னல் இதர்டன் என்பவருடன் பேசியபொழுது கோயரிங்கும் அதேதான் சொன்னர். "பிரிட்டனுடன் மிகவும் அன்னியோன்னியமாக இருக்கவேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை'' என்றும் சொன்னர். ஹாம்பர்க்கில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகிற பொழுது டாக்டர் கொயபெல்ஸ், "இப்பொழுது அரசியலில் என்னென்னமோ விபரீதங்கள் நடக்கின்றன. ஒன்றும் நடக்கக் கூடாததாக இல்லே. ஆகையால் இன்று தெருவில் போகிறவன்

'காலனிகள் எப்பொழுது திரும்பிவரப் போகின்றன?' என்று சர்வ சாதாரணமாகக் கேட்கிறன்'' என்றார். மேலும் என்னென்னமோ பேசினர். ''எங்களை யார் என்ன செய்ய முடியும்? நாங்கள் கேட்பது எங்களுக்குக் கிடைக்கிறது; இல்லாவிட்டால் வாளை உருவுகிறோம்'' என்றெல்லாம் பேசினர்.

ஜெர்மனி இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்பொழுதே, இதர நாடுகள் காலனிகள் பிரச்னையைக் கிளப்பி ஊர்ஜிதப் படுத்திக் கிளர்ச்சிகள் செய்ய ஆரம்பித்து விட்டன. ஜெர்மனி இன்றும் வாயைத் திறந்து கேட்கவில்லை. அதற்குள் ''காலனைகளைக் கொடுக்க வேண்டியது தான் நியாயம்'' என்று ஒருகட்சியும் ''உயிர் போனாலும் கூடாது'' என்று மற்றொரு கட்சியுமாக பல நாடுகளில் ''எங்கப் பாகுதிருக்குள்ளே இல்லை'' என்று பழமொழி சொல்லுவார்களே, அந்தமாதிரி தாங்களே தவளைகள்போல தங்கள் வாயால் சொல்லி ஜெர்மன் கோரிக்கைக்குப் பலம் கொடுக்கிறார்கள்.

காந்திஜி சொன்னது போல ஒரு சொட்டு ரத்தம்கூடச் சிந்தாமல் தன் காரியத்தை சாதித்துக்கொள்ள ஹிட்லர் ஒரு தனி சாஸ்திரத்தைத்தான் கண்டு பிடித்திருக்கிறார்.

* * *

## கிராம சேவை

கிராமசேவைக்காகக் கங்கணம் கட்டிக் கொண்டு வெளிவந்தது பாரதமணி. ''என்ன, ஒன்றும் காணவில்லையே? கிராமாந்திர விஷயமாக இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள்?'' என்று சில நெருங்கிய நண்பர்கள் அன்பின் மிகுதியால் ஆத்திரப்படுகிறார்கள்.

நாமும் ஆத்திரத்துடன்தான் கடிவாளத்தைக் கடித்து நிற்கும் குதிரை போலத் துடிக்கிறோம். நமது பேச்சு இன்றும் ரேடியோவின் 'மீடியம் வேவ்' (நடுத்தர அலை) போல் நகரங்களில்தான் அதிகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. அதை 'ஷார்ட்வேவில்' (சிறு அலையில்) கிராமாந்திரங்களுக்குப் பரப்பப் பெரு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். உட்கார்ந்து கொண்டுதானே நிற்க வேண்டியிருக்கிறது என்கிறார்கள்?

ஆனால், சென்ற வாரங்களில் கிராமந்திர வாழ்வைப் பற்றி ஏதோ ஒரு சிறிது எழுதித்தான் இருந்தோம். இந்தவாரம், கிராம சேவை என்ற பகுதியின் கீழ் இரண்டு விஷயங்கள் தருகிறோம். 'கிராம புனருத்தாரணம்' என்ற கட்டுரை தஞ்சாவூர் ஜில்லாவை உதாரணமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு பொது திட்டம். சரியான புள்ளி விவரங்களுடன் கட்டுரையாளர் விஷயத்தைத் தெளிவாக எடுத்து எழுதியிருக்கிறார்.

* * *

திருவாங்கூர் மகாராஜா, தான் பிறந்த தினத்தன்று ராஜீயக் கைதிகள் எல்லோரையும் விடுதலை செய்து, கிரிமினல் லா திருத்தத்தின் கீழ் பிறந்த உத்தரவுகளையும் ரத்துசெய்து விட்டார் என்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். சட்டவரம் பிற்குட்பட்டு சமஸ்தான காங்கிரஸ் சுதந்திரக் கிளர்ச்சியை நடத்தலாம் என்று திருவாங்கூர் சர்க்கார் கூறியிருப்பது அந்த நாட்டில் சுதந்திரம் உதயமாவதற்கு ஒரு சூசகமாக இருக்குமென்று நம்புகிறோம். நல்ல சந்தர்ப்பத்தில் தைரியமாக இந்தக் காரியம் செய்ய முன் வந்ததற்கு திருவாங்கூர் திவானையும் நாம் போற்றுகிறோம்.

நண்பர்களே, இந்த வாரம் ஒரு நல்ல செய்தி. நம்மிருவருக்கும் ஒரு நல்ல செய்தி. "பாரதமணியின்" வருஷ சந்தா நாலு ரூபாயிலிருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. காரணங்கள் பல. ஆனாலும் பொதுமக்களின் கணக்குத் தேட்டைதான்—நமது நாடு தமிழ் நாடல்லவோ?—முக்கிய காரணம். தனிப்பிரதி ஒரு அணா வென்றால் வருஷ சந்தா ரூபாய் நாலு எப்படியாகும் ஐயா? ஆசிரியரின் கணக்கும் இதர விஷயங்களைப்போல தட்டுக்கிடல்தான் போலிருக்கிறது! ஆமாம். ஒத்துக்கொண்டேன். கணக்கு கொஞ்சம் மட்டம்தான். கணக்கு பலமாயிருந்தால் ஐ. ஸி. எஸ். பரீக்ஷை பாஸ் செய்து கலெக்டர் உத்தியோகமல்லவோ இப்பொழுது செய்து வருவேன். ஆசிரியராகி கைவிரல்களெல்லாம் மைநலங்கிட்டு கஷ்டப் படுவானேன்?

* * *

காரியத்தில் விட்டுக் கொடுத்தாலும்; வாதத்திற்காக பதில் சொல்லிப் பார்க்கிறேன். ஐயா, தனிப்பிரதியின் விலை ஒரு அணாவோடு தபால் கூலியை பிரதி வாரமும் சேர்த்தால் ரூபாய் நாலுக்குமேல் ஆகி விடுகிறது! தபாலாபீஸில் ஒரு அணா மூட்டையைச் சுமக்க காலணா தபால் கூலி! இதுவே சரசமாம்! இவ்விதம் ரயிலில் போர்ட்டர்களுக்கு பெட்டிச் சுமையைத் தூக்க கூலி கொடுத்தால் நம்முடைய சொத்து என்ன கதியாகும்? தவிர, வாரச் சில்லரைக்கு வருஷ ஒப்பந்தம் மேலல்லவா? கௌரவமல்லவா? கொஞ்சம் கூடக் கொடுத்தாலுமென்ன? ஒப்பமாட்டோம், ஒப்பமாட்டோம். கிடைத்தால், கிடைத்த விடத்தில், தேவையானால், வாரம் வாரம், வாங்கிக்கொள்கிறோம். கிடைக்காவிட்டால் யாருக்கு நஷ்டம்? எங்களுக்கு ஒரு கோப்பை காபி லாபம். சரி, சரி, ஒப்புக்கொண்டு விட்டேன். இனிமேல் வாக்கு வாதம் வேண்டாம். வருஷ சந்தாவை ரூபாய் மூன்றாகக் குறைத்துவிட்டேன்.

* * *

உண்மையில் இப்படிக் குறைக்க தைரியம் வந்ததற்கு முக்கிய காரணம் விளம்பர உதவிதான். அவர்களுக்கு என் வந்தனம் மாத்திரம் செலுத்திப் போதாது. "பாரதமணி"யை வாங்கியும், வாங்காதும் வாசிப்போரின் வந்தனமும் உண்டு. இந்தக் கலியுகத்தில் பத்திரிகை உலகில் சந்தாவை வைத்து கொண்டு பத்திரிகை பிழைக்க முடியாதென்பது யாருக்கும் தெரிந்த விஷயம். கர்ணம், பட்டாமணியம் உத்தியோகம் போல் சம்பளம் ஜீவனத்திற்கு போதாது. மேல் வரும்படி வந்தால்தான் கணக்குப் பிள்ளைக்கு கணக்கு ராயஸம் ஓடும். அப்படியேதான் பத்திரிகை மூச்சிவிட வேண்டும் மென்றால் சந்தா போதாது. விளம்பர உதவி வேண்டும்.


* * *

ஒரு அணா விலைக்கு இந்த மாதிரி பத்திரிகை போடுவதில் என் எண்ணம் என்ன வென்றால் "பாரதமணி" ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பிரதியாவது போக வேண்டும் மென்ற கருத்துதான், ஆசைதான். ஆனால் இது வரையில் வாரவாரம் அச்சிடும் பிரதிகள் பெரும்பாலும் நகரங்களிலேயே சுழன்று நிற்கின்றனவே தவிர கிராமங்களை எட்டிப் பார்த்ததாகத் தெரியவில்லை. போகட்டும், அவசரமில்லை. கிராம முன்னேற்றம் அரசியல் ஆயக் கட்டில் மேட்டுப்பாசனம். ஜலம் தங்கித் தேங்கித்தான் மெதுவாய், பிந்திப்பாயும். தவிர, குருவை நெல் விலை தஞ்சாவூர் ஜில்லாவில் கலம் ஒன்றுக்கு ரூ 1—3—3 வீதம் விற்கிறதாகத் தெரியவருகிறது. இப்படி விலை விற்றால், வக்கீல்கள் போகட்டும், யார்தான் எப்படி பிழைக்கிறது? காபிகளைப், சினிமா—இவைகளிலிருந்து மீண்டு வெளி வந்தல்லவோ பத்திரிகையையும் உணவையும் தேடவேண்டும்?

* * *

நான் என் மனதில் போட்டிருக்கும் திட்டப்படி இன்னும் "பாரதமணி"யை செப்பனிட முடியவில்லை. புதுக் காளைகளை சோட்டை விட்டு மாறாமல் வண்டி இழுக்கும்படி செய்ய, கொஞ்ச காலம் பழக்க வேண்டாமா? இப்பொழுது கல்லிலும், வரப்பிலும், வேரிலும், "ரேக்ளா" சாரத்யம் போல்தான் இருக்கிறது. பத்திரிகை உலகில் எவ்வளவோ கஷ்டங்களிருக்கின்றன. நகரவாசியின் தொழிலாயிருந்தாலும் இதை உழவிற்கு ஒப்பிடலாம். அதைவிட பத்துபங்கு சிரமம் உண்டு.மகசூல் உண்டோ என்னமோ சந்தேகம். உழவேண்டும், உழவிற்கு மாடு

கலப்பை தயார் செய்ய வேண்டும். கலப்பை தயார் செய்ய ஆசாரியின் தயவு வேண்டும். அதுவும், நீங்கள் சின்ன மிராசுதாராயிருந்தால் கேட்க வேண்டாம். பிள்ளையாருக்கும் தேங்காய் உடைக்க வேண்டும். எருவடிக்க வேண்டும், விரை தெளிக்க வேணும், நாற்றடித்து நடவேண்டும்; குழந்தையை வளர்ப்பது போல் நாலு மாதகாலம் பயிரை வளர்க்கவேண்டும். ஆடுமாடுகளின் அழும்பிலிருந்து காற்க வேண்டும். காச்சலும் கூடாது, வெள்ளமும் கூடாது. பிறகு, காலத்தில் கண்ணை கொட்டாமல் அறுவடைசெய்து, வீட்டிற்கு கொண்டு வந்து—பிறர்கள் பார்வையால் சுடாமல்—குதிரில் போட்டாலல்லவோ நகரவாசிகளுக்கு தினசரி இலையில் சாப்பாடு 9—20 மணிக்குள் வந்துவிழும்? சம்பளம் வாங்கி ஆபீஸிற்குப் போகிறவர்கள், கைப்பிடி அன்னத்தை உண்ணும்பொழுது இந்த அடிப்படையாயுள்ள நெற்றி வேர்வையின் ஆயாசத்தை நினைப்பார்களோ? புத்திக்கு உணவைத் தேடும் பத்திரிகைத் தொழிலும் இப்படித்தான், கிருஷியைப்போல். மணி.


## ஸ்ரீ பரசுராம சித்த ஔஷதாச்ரமம்,

திருவண்ணாமலை (N. A. Dt.)

இந்த வைத்தியசாலையில், சகல வியாதிகளுக்கும், சித்தர்களுடைய முப்பு குருமுறையில் தயாரித்த, உத்தமமான மருந்துகளைக் கொடுத்து குணப்படுத்தப்படும். அநுபவமும், கைகண்ட முறையுடன் கூடின மருந்துகளாகையால் எவ்வித வியாதியையும் குணப்படுத்த முடியுமென்று உத்தரவாதம் செய்யப் படுகின்றது.

க்ஷயம் (ட்யூபர்குளாஸிஸ்) நீர் ரோகம் முதலிய கடுமையான வியாதிகளுக்கு உத்தர வாதத்துடன் கூடிய பிரத்தியேக மருந்துகள் உண்டு. அநேக பிரபலஸ்தர்களால் நன்குமதிக்கப் பெற்றது. ஓர் முறை பரீக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். நேரிலோ அல்லது கடித மூலமாகவோ விபரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

# ஐரோப்பாவில்

ஜெர்மன் பிரசார மந்திரி டாக்டர் கொயபெல்ஸ் குடியேற்ற நாடுகளுக்கும் அடிப்போட ஆரம்பித்து விட்டார். ஹாம் பர்க் நகரத்தில் அவர் பேசியபோது தெருவில் போகிறவர்களெல்லாம் 'எப்போது குடியேற்ற நாடுகள் திரும்பி வரப் போகின்றன ?', என்று அவர் பிராணனை வாங்குகிறார்களாம். இன்னும் அவர்கள் 'ஐயோ! நமது எதிரிகள் அவைகளை நமக்குக் கொடுப்பார்களோ ?' என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறார்களாம். ஆனால் கொயபெல்ஸ் பகவான் அவர்களுக்கு அபயம் அளித்து அந்த சந்தேகத்தைப் போக்குகிறார். "எதிரிகளா? எங்கே அவர்கள்? நாம் கத்தியை எடுத்து சுழற்றினால் வெற்றி நம்முடையது நமது எதிரிகள் பயந்தாங் கொள்ளிகள். சண்டை என்றால் நாம் கேட்டதை எல்லாம் கொடுத்து விடுவார்கள். ஆகையால் ஜெர்மானியரே! பயப்படாதீர்கள்" என்று திருவாய் மலர்ந்தருளிவிட்டு, ஆயுதங்களை ஜெர்மனி அதிகமாக்கிக் கொண்டதற்கு ஓர் காரணமும் சொல்கிறார்.

"நமக்கு ஜன்ம சத்துருவான சிலர் மாஸ்கோவிலும் லண்டனிலும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நல்ல வேளையாக மந்திரி சபையில் இல்லை. நாளைக்கு அந்தப் பதவிக்கு அவர்கள் வரக்கூடுமாதலால் ஜெர்மனி சண்டைக்குத் தயார் செய்து கொள்ள வேண்டியதாகிறது" என்றார்.

பிரிட்டிஷ் மந்திரி ஸர் சாமுவேல் ஹோர் பதில் சொல்கிறார்: "நாங்கள் ஏன் ஆயுத முஸ்தீப்புச் செய்கிறோமென்றால் ஹிட்லர்போன்ற நல்ல சுபாவமுடையவர்கள் நாளைக்கு ஜெர்மனியில் இல்லாமல் வேறுயாராவது போக்கிரிகள் வந்தால் என்ன செய்கிறதென்றுதான்." போகட்டும், பேச்சாவது சாரசாரமாயிருக்கிறதே !

ஸெக்-ஹங்கேரித் தகராறு இன்னும் தீர்ந்தபாடில்லை. ஹங்கேரி மியூனிச் வல்லரசுகளின் உதவியைத் தேட உத்தேசித்திருக்கிறது.

பிரிட்டிஷ் மந்திரி சபையில் மாறுதல் ஏற்படலாமென்று ராய்ட்டர் ஜோஸ்யம் சொல்லுகிறது.

## பாலஸ்தீனத்தில்

ஜெருஸலம் நகரை ராணுவத்தார் காத்து வருகிறார்கள். அராபியர்கள் ராணுவத்தாரை சிற்சில இடங்களில் எதிர்த்ததாகவும் இருதரப்பிலும் உயிர்ச்சேதம் உண்டானதாகவும் செய்திகள் கூறுகின்றன. அரசாங்கம் எல்லா அரபிய இளைஞர்களும் ஒரு அறிவிப்புச் சீட்டு வாங்கிக் கொள்ளவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறது. இந்த உத்தரவு எவ்வளவு ராஜ விசுவாசிகள் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காகவாம். அரபியத் தலைவர்கள் 'அந்தச் சீட்டை ஒருவரும் வாங்கிக் கொள்ளக் கூடாது' என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். யூதர்கள் லண்டனில் கூட்டம் கூடி பயங்கர இயக்கத்தை எப்படியாகிலும் அடக்கி விடவேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறார்கள். ஜெருஸலத்தில் அமைதி நிலவுவதாக கடைசியாக வந்த செய்தி கூறுகிறது.

## கிழக்கே

ஜப்பானியப் படை காண்டன் நகரைப் பிடிக்கிறது. ஜப்பானியர் குதூகலத்திற்கிடையில் சைனப் படைகள் பின் செல்லுகின்றன. ஜப்பானியக் கப்பல் படையும் விமானங்களும் ஹான்கோ நகரை முற்றுகை போடுகின்றன. சீனத்தலைவர் சியாங் கெய் ஷெக் ஹான்கோவை விட்டு முன்னதாகவே சாக்ஷா என்ற தென்மேற்கு நகருக்குப் போகிறார், ஹாங்கோவை ஜப்பானியப்படை பிடித்து விடுகிறது 9000 சீனரை ஜப்பானியர் குண்டு போட்டுக் கொலை செய்கிறார்கள். ரங்கூனில் அமைதி ஏற்பட்டதை உத்தேசித்து கவர்னர் பந்தோபஸ்து சட்டங்களை ரத்து செய்கிறார்.

## இந்தியாவில்

காந்திஜி சில மஹத்தான கட்டுரைகளை 'ஹரிஜனில்' எழுதுகிறார்

ஒற்றுமை, அஹிம்சை இவை இரண்டும் நம்மிடமிருந்தால் சுயேச்சை அடைவது மிகவும் எளிது என்று கூறுகிறார். மற்றொரு கட்டுரையில் காங்கிரஸில் சேர்ந்திருக்கும் குப்பைகளைக் களைந்து அந்த ஸ்தாபனத்தை தூய்மையாக்கவேண்டும் என்று எழுதுகிறார். "காங்கிரஸ் அதன் தன்மையை இழந்துவிட்டால் என்ன பிரயோஜனம்? உப்பு அதன் சுவையை இழந்து விட்டால் எதைக்கொண்டு அதற்கு மறுபடியும் சுவை உண்டாக்குவது?" என்று கேட்கிறார் காந்திஜி

காந்திஜியின் சுற்றுப் பிரயாணத்தின் போது எங்கும் உத்சாகமாக வரவேற்பு அளிக்கப்படுகிறது. ஹாங்கு பிரதேசவாசிகள் காந்திஜிக்கு அளித்த வரவேற்புப் பத்திரத்தில் அஹிம்சைப் போரில் உயிர் விடத்தயாராயிருப்பதாகக் கூறுகிறார்கள்

திருவாங்கூர் மஹாராஜா பிறந்த தின விழாவின்போது சகல ராஜீயக் கைதிகளுக்கும் விடுதலை அளித்துவிட்டார்கள். சமஸ்தான காங்கிரஸின்மேல் போடப்பட்ட தடையை நீக்கிவிட்டதாகவும் இனி மேல் சகல ஜனங்களும் அமைதியாக நடந்து கொள்ளவேண்டுமென்றும் மஹாராஜாவின் உத்தரவு கூறுகிறது. ஆனால் திவான்பேரில் கூறப்பட்ட குற்றச் சாட்டுக்களை வாபீஸ் கொள்ளவேண்டுமென்று அறிக்கை கூறுகிறது.

ராஜ் கோட்டில் திவான் சமரச கோரிக்கைகளை வெளியிடுகிறார். தென்கனலில் அடக்குமுறை நடக்கிறது.

## தமிழ் நாட்டில்

திருமங்கலம் அரசியல் மகாநாட்டில் ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதி சமஷ்டியை எதிர்க்கவேண்டிய அவசியத்தைப்பற்றிக் கூறுகிறார்.

கவர்னர் மதுரையில் செய்த பிரசங்கத்தில் தமக்கும் மந்திரிகளுக்குமுள்ள நெருங்கிய சம்பந்தத்தைப்பற்றிக் கூறி மந்திரி சபை செய்து வரும் கார்யங்களைப் பாராட்டிப் பேசுகிறார்.

மதுரையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் மஹாலக்ஷ்மி மில் சம்பந்தமாக நடந்த போலீஸ் தடியடியைப்பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்படுகிறது. நமது பிரதம மந்திரி நாகப்பட்டணத்தில் இந்தியன் ஸ்டீல் ரோலிக் மில் தொழிற்சாலையில் மின்சார அடுப்புக்கு அஸ்திவாரக்கல் நாட்டும்போது பெரிய தொழிற்சாலைகளின் அவசியத்தைப்பற்றிக் கூறுகிறார்.

நாகப்பட்டணத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பிரதம மந்திரிக்கு உத்சாகமான வரவேற்பளிக்கப்படுகிறது.

ஆலயப் பிரவேசத்தை ராஜதானி முழுதும் நவம்பர் மாதத்திற்குள் கொண்டு வர வேண்டுமென்றும் இல்லாவிட்டால் சத்யாக்கிரஹம் நடத்தப் போவதாகவும் திருநெல்வேலி நாடார்கள் கூறுகிறார்கள்.

மருந்து சரக்குகள் நிர்வாகம் சம்மந்தமாக மாகாண அரசாங்கங்களுக்கு இருக்கும அதிகாரத்தைப்பற்றி மத்ய சட்ட சபையில் ஓர் திட்டமான சட்டம் கொண்டு வரவேண்டுமென்று நமது சட்ட சபையில் ஓர் தீர்மானத்தை டாக்டர் ராஜன் கொண்டுவரப் போகிறாராம்

# கூண்டுக்கிளி

(கு. பா. வேங்கடாசலம்)

[பச்சைக் கிளிகள். ஒன்று ஆண்; மற்ருென்று பெண். கூண்டு வாழ்க்கையில் சலிப்புற்ற பெண் ஆணிடம் சொல்லுகிறதும் பதிலும்,]

பெண்

1. "எத்தனை நாளாக—இப்படி
ஏங்கித் தவிப்பது நாம்?
சித்தமும் வாடுதையோ!—நமது
சீவனு மொடுங்குதையோ!

2. செழிப்புள்ள நாட்டை—பிறர்
சேர்த்து ஆள்வது போல்,
அழகுள்ள நம்மை—கூண்டில்
அடைத்து வைத்து விட்டார்.

3. தங்கத்தினல்கூண்டுகள் தான்-தின்ன
தேங்கனி களுந்தான்,
இங்ஙனம் வாழ்ந்து வந்தால்—நம
தேக்கமும் தீர்ந்திடுமோ?

4. கோல மொழிகளாலே—நமது
குலத்துக்கு மேன்மை யாச்சு,
சோலையி லிருந்தாலல்லோ—இனிய
சொற்பேசி மகிழ்ந்திருப்போம்.

5. அக்கா! அக்கா! என்று—சொல்ல
அடிமைப் படுத்திவிட்டார்,
எக்காலம் தீருமையா?—இப்படி
ஏங்க மடிவதையோ?

6. பச்சை சிகப்பு என்று—நம்மை
பலவிதமாய்ப் புகழ்ந்து,
இச்சையுடன் திரிய—மூடர்
இசைய வில்லை அய்யோ!"

7. கிளிமொழியினிலே—இவ்வளவும்
கூறி அழுது விட்டு,
இழிவாக மானிடரை—இன்னம்
என்னென்னவோ சொன்ன
தம்மா!

ஆண்

8. "கவலைப் படாதடி—நம்மைக்
காக்கத் தெய்வமுண்டு,
சவலைப் பிள்ளையைப்போல்—
நெஞ்சம்
தளர்ந்து வாடாதடி.

9. ஆனைக் கொருகாலம்—வந்தா
லது பூனைக்கும் வராதோடி
வானைப்படைத்த தெய்வம்—நமக்கு
வழியைக் காட்டுமடி"

10. என்ற ஊக்கஉரை—ஆணும்
இணைக்குச் சொன்னதம்மா!
நன்று பேசிற்றம்மா— இத்தனையும்
நமக்கும் பொருந்து மன்ருே?

# கிராம புனருத்தாரணம்

(ரா. குஞ்சிதபாதம்)

தஞ்சாவூர் ஜில்லாவிற்கு, ஒரு திட்டம் போட்டு அதன் பொருளாதார நிலைமையை சீர்திருத்தி அமைத்து அபிவிருத்திக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான புள்ளி விவரங்கள் தகுந்தவாறு இன்னும் தயாராகவில்லை. ஆகையால் தஞ்சாவூர் ஜில்லாவைத் தென்னிந்தியக் களஞ்சியம் என்றும் அதன் ஜனத்தொகை அதன் விஸ்தீர்ணத்திற்கு ஏற்றதுதான் என்றும் இதுவரையில் சாதாரணமாக எண்ணிவந்தவர்களுக்குப் பின்வரும் விவரங்கள் ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடும்.

தஞ்சாவூர் ஜில்லா மொத்தம் 24,00,000 ஏகர்கள்; 1931-ம் வருஷத்து ஜனத்தொகைநிர்ணயப்படி அதன் ஜனத்தொகை 23,85,920. ஜனத்தொகை நெருக்கத்தில் ராஜதானியிலேயே தஞ்சாவூரை மிஞ்சும் ஜில்லா கிடையாது. அதில் தான் சதுரமைலுக்கு சராசரியில் சுமார் 638 பேர் வசிக்கிறார்கள். இந்த விஸ்தீர்ணத்தில் 15,81,238 ஏகர்கள் கைப்பற்று நிலங்களாக இருக்கின்றன. ஒவ்வொரு கைப்பற்றின் அளவும் தானாகாக்களைப் பொருத்திருக்கிறது. மொத்தத்தில் ஜில்லாவின் வடகிழக்கு பாகத்தில் கைப்பற்றுகள் பெரியவை ; தென்மேற்கில் சிறியவை.

12,71,000 ஏகர்கள் சாகுபடியில் இருக்கின்றன. ஆகவே சாகுபடியாகும் ஒவ்வொரு ஏகருக்கும் இரண்டுபேர் என்று ஜனத்தொகை பிரிவாகிறது. விவசாயத்தில் வாஸ்தவமாக ஈடுபட்டிருக்கும் ஜனங்களின் தொகை 5,50,534 தான். ஆகையால் மொத்த ஜனத்தொகைக்கும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் இருக்கும் விகிதம் பின்வருமாறு என்று கொள்ளலாம். ஒரு விவசாயி $2\frac{1}{2}$ ஏகர் உழுது சாகுபடி செய்தால் அந்த விளைச்சலில் 5 பேர் சாப்பிடுகிறார்கள்.

ஜனத்தொகை நெருக்கத்தால் சாகுபடி நிலத்திற்கு இருக்கும் கிராக்கி எவ்வளவு என்பது டென்மார்க் போன்ற ஒரு விவசாய நாட்டை எடுத்து ஒத்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும்.

நீர்நிலப்பரப்புடன் டென்மார்க்கின் மொத்த விஸ்தீர்ணம் 96,45,000 ஏகர்கள். சாகுபடி நிலமும் புல் தரையும் சேர்ந்து 71,45,000 ; அதாவது தஞ்சாவூர் ஜில்லாவின் சாகுபடி விஸ்தீர்ணத்தைக் காட்டிலும் ஆறு மடங்கு அதிகம். ஆனால் டென்மார்க்கின் ஜனத்தொகை என்ன தெரியுமோ? 32,00,000—அதாவது தஞ்சாவூர் ஜில்லாவின் ஜனத்தொகையைக் காட்டிலும் அதில் மூன்றில் ஒரு பங்கு அதிகம். இந்தப்புள்ளி விவரங்களை ஆராய்ந்து பார்த்தால் என்ன தெரிகிறது? தஞ்சாவூரில் ஒவ்வொருவனுக்கும் $\frac{1}{2}$ ஏகரா சாகுபடி நிலம் இருக்கிறது சராசரியில் ; டென்மார்க்கிலோ $2\frac{1}{5}$ ஏகர்.

இப்படி ஒத்துப் பார்ப்பதில் மற்றொரு விஷயம் இருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லா ஒரு ஏகரா விளைச்சலுக்கும் டென்மார்க் தேசத்தின் உரமேற்றிய விளைச்சலுக்கும் ஒப்பிடுதலே கிடையாது. காவேரிப் பாசன நிலங்கள் பல நூற்றாண்டுகள் கணக்காக ஓயாமல் மாறுதலின்றி சாகுபடியாகி வந்ததில், மண்ணே சத்தற்றுப் போய்விட்டது. நெல் பயிருக்கு மிகவும் தேவையான இரண்டு சத்துகள் அந்த பூமியில் மிகமிகக் குறைந்திருப்பதாக மண் பரிசீலனையில் தெரிகிறது.

இந்த சத்துகள் குறைந்திருப்பதற்குப் பின்வருமாறு நிவர்த்திகள் செய்யலாம். (1) நைட்ரேட்டுகள் முதலிய ரஸாயன சாஸ்திர உற்பத்திகளான உரங்களைப் போடலாம். (2) பின்சாகுபடி பயிருக்கு உரம் கொடுக்கும் மணிலாக் கொட்டை போன்ற பயிர்களை முதலில் சாகுபடி செய்யலாம் (3) கால்நடைகளின்கொட்டில் உரத்தைநன்றாகவும் நிறையவும் போடலாம். குடியானவன் ரஸாயன உரம் வாங்கிப் போடமுடியாது. நஞ்சைகளில் உரம் கொடுக்கக்கூடிய புஞ்சை பயிர்களையும் ஏற்ற முடியாது. சாணம், கூளம் முதலிய மாட்டுக் கொட்டில் உரத்தைப்பற்றியோ கேட்க வேண்டியதில்லை. அதை நமது குடியானவன் சேகரித்து வைத்து வயலில் போடுவதென்பது மிகவும் அரிது.

அதுவும் தவிர, ஜில்லாவில் கால்நடையே மிகவும் குறைவு. ஜில்லா பூராவுக்குமே சேர்த்து பத்து லட்சம் கால்நடைகள் தான் இருக்கின்றன. டென்மார்க்கில் 25 லட்சம். அதைத்தவிர டேனிஷ் குடியான வனுக்கு அவனுடைய பன்றிகள் மூலமா கவும் உரம் கிடைக்கிறது; டென்மார்க் கில் 25 லட்சம் பன்றிகள் இருக்கின்றன. கால்நடைகள் மூத்திரத்திலிருக்கும் உரத்தின் மகிமை இந்தியக் குடியானவ னுக்குத் தெரிகிறதில்லை. பக்கத்தில் நாற்றமெடுத்தும், குளம் குட்டைகளை அசுத்தப்படுத்தியும் அது வீணாய்ப் போ கிறதே ஒழிய, அதைக் குடியானவன் சேகரிப்பதில்லை. டென்மார்க்கில் அதற் கென்றே ஏற்பாடாகக் கட்டப்பட்ட தொட்டிகளில் அந்தச் சிறுநீரைக்கட்டித் தேவையானபோது எடுத்துக் கொள்ளு கிறார்கள்.

டேனிஷ் உழவனுக்குக் காளைமாடே தேவையில்லை; குதிரைகளோ அல்லது யந்திரங்களோ அந்த வேலைக்கு உபயோ கப்படுகின்றன. ஆகையால் கால்நடை அபிவிருத்திக்குத் தேவையான தொகை காளைகளும் பசுக்களும்தான் அவர்கள் வைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் நம் நாட்டிலோ காளையில்லாவிட்டால் உழவு கிடையாது. தஞ்சாவூர் ஜில்லா வில், கால்நடைத் தொகையில் பாதிக்கு மேல் எருதுகள்தான்; ஆனால் அவைகள் கூடதேவைக்குப் போதவில்லை. ஒரு ஜோடிமாடு 6 ஏகரா உழவேண்டியிருக் கிறது.

வெறும் அரிசிச் சோற்றை உண்போ ருக்கு பால் எவ்வளவு அவசியம் என்பது சொல்லத் தேவையில்லை. மக்களின் பல வீனத்திற்கும், மிகவும் அதிகமான சிசு மரணத்திற்கும் (கிராமங்களில்கூட) கார ணம் உணவில் பால் அம்சம் குறைந்திருப் பதுதான். டென்மார்க்கிலிருக்கும் கால் நடைகளில் பாதிக்குமேல் பசுக்கள். தஞ் சாவூர் ஜில்லாவிற்கே 2,79,134 பசுக்கள் தான். இது மாத்திரமா? டேனிஷ் பசு வருஷத்தில் 6000 பவுண்டு பால் கறக்கி றது; தஞ்சாவூர்ப்பசு 800 பவுண்டு பால் தான் கறக்கிறது. மேலும் இங்கே பசுக்களுக்கு கிராமாந்திரங்களில் தீவ னமே கிடையாது. பட்டணங்களில்தான் ஹோட்டல் முதலியன இருப்பதால் தீனி கொஞ்சமாவது போடுகிறார்கள்.

(தொடரும்)

## கிராமக் கைத்தொழில்

கிராமக் கைத்தொழில் என்ற வார்த்தை யின் அர்த்தத்தை நாம் சரியாகத் தெரிந்துகொண்டுவிட்டால், இந்தப் பிரச் னையே கஷ்டமானதாகத் தோன்றாது. கிராமக்கைத்தொழில் என்பது பின் வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(1) கைத்தொழிலுக்கு வேண்டிய விளைபொருள்கள் சமீபத்தில் குறைந்த விலைக்குக் கிடைக்கவேண்டும். கிடைப்ப தற்கு அரிதான விளைபொருள்களைக் கொண்டு தொழில் ஆரம்பிப்பது கஷ்டம். எந்தப் பொருள்கள் இயற்கையாகக் கிடைக்கக்கூடுமோ அவைகளைக் கொண்டு தான் கிராமத் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்பது தெளிவாகிறது.

(2) பொருளை உற்பத்தி செய்வதற் கும் கருவிகளை உபயோகிப்பதற்கும் உள்ளூர் தொழிலாளர்களை நம்பியிருக்க வேண்டும். வெளியூர் தொழிலாளர்களை எதிர்பார்த்தால் கஷ்டங்கள் உண்டாகும்.

(3) கிராமத் தொழிற்சாலையிலிருந்து வரும் சாமான்களுக்குச் சந்தை அந்த கிராமமாகத்தான் இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்திற்கு வேண்டிய வஸ்திரங் களை அந்தக்குடும்பமே உற்பத்தி செய்தல், அதற்கு வேண்டிய வெல்லத்தை தானே செய்து கொள்ளல், சொந்தத் திறமை யைக்கொண்டே தன் தேவைகளைப் பூர்த்தி செய்தல், இவைதான் கிராமத் தொழிலின் முக்கிய அம்சங்களாக இருத்தல் வேண்டும். அதற்குப் பிறகு தான், அடுத்த கிராமங்களின் தேவை களைப் பூர்த்தி செய்ய வேண்டும். அடுத்த கிராமத்திற்கும் தொழிற்சாலைக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்து விற்பனை

பண்டமாற்ருக இருக்க வேண்டும். நடுவில் தரகர்கள் கூடாது. இன்னும், தனிப்பட்ட முறையில் தொழிலாளி சந்தைகளிலும், திருவிழாக்களிலும் பொருள்களை விற்கலாம். அதனல் கிராமத் தொழிலாளி தன் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். மற்ற சாமான்கள் எப்படியிருக்கின்றன என்று தெரிந்துகொண்டு தான் செய்யும் சாமானுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

(4) கிராமத் தொழிலாளி தானே ஊர் ஊராய் சென்று விற்பது என்பது முடியாது. ஆனல் வியாபாரிகளோ தொழிலாளியைச் சுரண்டப் பார்ப்பார்கள். சர்க்கார் விற்பனை ஸ்தாபனங்களும் முடிவில் வியாபாரியையே எதிர்பார்க்கின்றன. கூட்டுறவு விற்பனை ஸ்தாபனங்கள்தான் இந்தக் குறைகளைப் போக்க முடியும். அகில இந்திய சர்க்கா சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் நன்ருக நிர்வகிக்கப் படுகின்றன. இதற்குக் காரணம் அதைக் கண்காணிப்பவர்களின் செல்வாக்குத்தான். இவைகளைப் போன்ற ஸ்தாபனங்களால்தான் கிராமத் தொழிலாளியை தரகர்களிடமிருந்து காப்பாற்ற முடியும்.

கிராமத் தொழிலை விருத்தி செய்வதில் ஓர் வரையறை உண்டு. தொழிற்சாலைகள் பிரம்மாண்டமாகி, கிராம வாசிகள் வாழ்க்கை, பிழைப்பு, வேலை—இவைகளை அடியோடு மாற்றுவதாக இருக்கக் கூடாது.

உதாரணமாக நூல் நூற்பதை எடுத்துக் கொள்வோம். உயர்ந்த ரகமுள்ள பஞ்சு நமக்குத் தேவை. நூற்பதற்கு வேண்டிய உயர்ந்த உபகரணங்கள் நமக்கு வேண்டும். மில் ஜென்னியுடன் போட்டி போடக்கூடிய வேகமுள்ள சர்க்கா நமக்குத் தேவை; நல்ல தரிகளை நாம் விரும்புகிறோம். சலவையும், சாயமும் அச்சுக் கருவிகளும், முறைகளும், அபிவிருத்தி அடையவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நூற்பவர்களுக்குக் கூலியும்—குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு ரூபாயாவது—அதிகமாகவேண்டும். கதர் கஜம் இரண்டணு ஆகவேண்டும்.

கிராமத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் பொருள்கள் ஒரு கிராமத்திற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவுதான் இருக்கவேண்டும். இன்னொரு கிராமத்தின் வியாபாரத்தைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது. ஒழிந்த நேரங்களை கிராமத் தொழிலாளர்கள் சமூக சேவையில் செலவழிக்கலாம்.

பிரம்மாண்டமான தொழிற்சாலைகள் மனித சமூகத்தின் பிரச்னைகளுக்கு மருந்தல்ல. ரஷ்யாவில் மட்டும்தான் தேசத்தின் எல்லாத் தொழிலாளருக்கும் வேலை கொடுக்கக்கூடிய தொழிற்சாலைகள் உள்ளன. இத்தகைய திட்டங்களில் எல்லாத் தொழிலாளரும் பட்டினி கிடக்கும்படியான அபாயமும் நிச்சயம் இருக்கிறது. அப்படி தேசமே பட்டினி கிடக்கும்படியான நிலைமை ஏற்படுவதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது.

# துணுக்குகள்

### இந்தியாவில் ரஸ்தாக்கள்

மோட்டார் வண்டிகள் போகக்கூடிய ரஸ்தாக்கள் இந்தியாவில் மொத்தம் 1,40,000 மைல் நீளம். 62,000 மைல் தூரம் ரோட்டுகள் நன்ருக சரளே போட்டவை. அதில் 13,000, அல்லது, 14,000மைல் நீளமுள்ள ரஸ்தாக்கள் தான் ரயில்வே பாதையுடன் சேர்ந்தாற்போல் போகின்றன. பஸ்கள் போக்குவரத்தில் உலகத்திலேயே இந்தியா நாலாவது ஸ்தானம் வகிக்கிறது.

### ஹிட்லர் சுயசரிதை

நாஜிக் கட்சியின் வேதமாகிய 'மெய்ன்காம்ப்' (என்முயற்சி) என்னும் ஹிட்லரின் சுய சரிதை 40,00,000 பிரதிகள் விலையாகிவிட்டனவாம்!

இதிலிருந்து வரும் வருமானமே ஹிட்லரை பணக்காரராக்கி விட்டதாம். 1924-ம் வருஷம் சிறையிலிருந்தபொழுது அந்தப் புத்தகத்தின் முதல் பாகத்தை எழுதினுர்; இரண்டாம் பாகத்தை 1926-ம் வருஷம் முடித்தார்.

இது அநேக அன்னியபாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

### முகப் பௌடர்

மூன்று வருஷங்களுக்கு முன்னிருந்ததைக் காட்டிலும் இப்பொழுது இரண்டு மடங்கு அதிகமாக ஸ்திரீகள் முகப்பௌடர்கள் முதலியன உபயோகிக்கிருர்கள். 'மேக்கப்பில்' இந்தியப் பெண்கள் வருஷத்திற்கு 18 லட்சம் ரூபாய் செலவிடுகிருர்கள்!

வருஷா வருஷம், வாசனே சோப்பு வகையரு அமெரிக்காவிலிருந்து 26 லட்சம் ரூபாய் பெறுமான மானதும், இங்கிலாந்திலிருந்து 9 லட்சமும், ஜெர்மனியிலிருந்து 11 லட்சமும், பிரான்விலிருந்து ஒரு லட்சமும் இறக்குமதியாகி இந்தியாவில் செலவாகிறது!

### புத்தகாலயங்கள்

பாரிவிருக்கும் நாஷனல் லைப்ரரிதான் உலகத்திலேயே மிகப் பெரியதானது. அதில் 79,70,000 புத்தகங்கள் இருக்கின்றன. அடுத்தது மாஸ்கோவிலிருக்கும் லெனின் லைப்ரரி. அதில் 55,41,000 புத்தகங்கள் இருக்கின்றன.

லண்டனில் மட்டும் 500 புத்தகாலயங்கள் இருக்கின்றன.

### சென்னை மின்சார இலாகா

சென்னை மின்சார இலாகா 1937-38 வருஷத்து அறிக்கையின்படி, பைகாரா மூலம் 15·17 லட்சம் வருமானம்; 1937 ஜூன் மாதம் வேலை ஆரம்பித்த மேட்டூர் ஸ்தாபனத்திலிருந்து வருஷ முடிவு வரை 3·45 லட்சம் வருமானம். 1938 மார்ச்சில் பாபநாசம் மின்சாரதிட்ட வேலையையும்ஆரம்பிக்க உத்தரவாகி விட்டது. கிராமாந்திரங்களில் மின்சார வசதி அளிக்கும் திட்டத்தின்படி இந்த வருஷத்தில் நல்ல வேலை நடந்திருக்கிறதாம்.

### அகில இந்திய ரேடியோ

கணக்குகளின்படி, அகில இந்திய ரேடியோவிற்கு வருஷத்தில் 7 முதல் 8 லட்சம் ரூபாய் வரை வருமானம் வருகிறது. ஆனுல் இந்த வருமானம் பூராவும் ரேடியோ இலாகாவில் செலவாகிறதில்லை. பணத்தேவை கொண்ட சில இதர இலாகாக்களுக்கு இந்தப் பணம் அர்ப்பணமாகி விடுகிறது. இந்த வருமானம் பூராவும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் ரேடியோ செட்டுகளுக்கு விதிக்கப்படும் சுங்கவரியின் கூடுதல் தொகை.

### கால்நடைத் தீவனம் மேய்ச்சல்கள்

விவசாய ஆராய்ச்சிக் கவுன்விலில் கால் நடை தீவன மேய்ச்சல் அபிவிருத்திக் கமிட்டி ஒன்று நியமித்திருக்கிருர்கள்.

இந்தியப் புல்வகைகள், புல்தரைகள், தீவனச் செடிகள் முதலியவைகளைப் பற்றி விவரங்கள்சேகரிக்க வேண்டுமென்று அந்தக் கமிட்டி 1937 நவம்பர் மாதம் கூடிய முதல் கூட்டத்தில் தீர்மானித்தது.

கூடிய சீக்கிரம் ஸ்தாபிக்கப்படப் போகும் மாகாணக் கமிட்டிகள் பின்வரும் விஷயங்களை ஆராய்ச்சி செய்யும்:— (1) புல் வகைகள் சீக்கிரமாக முளைத்து வளருவது, (2) முதல் தரசத்துள்ள தீவன வகைகளை விருத்தி செய்வது (3) மாறி மாறிப் பயிர்விட்டு அறுப்பது (4) பருப்பு வகைகளிலிருக்கும் தீவன சத்தை ஆராய்ச்சி செய்வது.

# குழந்தை மனம்

" சங்கரதாஸன் "

சுந்திரமய்யருக்குப் பிள்ளைப்பேறு இல்லாதது பெருங்குறையா யிருந்தது. அவர் கொஞ்சம் சொத்து உடையவர்; மேலும் சர்க்கார் உத்தியோகஸ்தர். மயிலாப்பூரில் ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டார். சதிபதிகளிருவருக்கும் வீட்டின் ஒரு சிறு பகுதியே போதுமானதால் மிகுந்த பாகத்தில் தன்னுடைய சிநேகிதர் ஒருவரைக் குடி வைத்திருந்தார். அந்த நண்பர் வேறு ஊருக்கு மாற்றப்படவே, சுந்திரமய்யருக்கு அந்தப் பெரிய வீட்டில் இருப்பது மிகவும் கஷ்டமாயிருந்தது. சிநேகிதர் குடியிருக்கும் பொழுதோ அவர் குழந்தைகளெல்லாம் எப்பொழுதும் சுந்திரமய்யர் வீட்டுப் பகுதியிலேயே இருந்தன. "டுலெட்" போட்டால் முன்பின் யோக்கியதை தெரியாதவர்கள் குடி வந்து விடுகிறார்கள்; ஆகையால் தன் நண்பர்களிடம் சொல்லித் தெரிந்தவர்களாக, அதிலும் குழந்தை உள்ளவர்களாகப் பார்த்துக் குடிவைக்க வேண்டுமென்ற ஆசை சுந்திரமய்யருக்கு. அவ்விதமே அவர் நண்பர் ஒருவரின் பேச்சைக்கேட்டு கே. ஜி. ஜே. சர்மா என்னும் வியாபார ஏஜெண்ட் ஒருவரைக் குடிவைத்தார்.

சர்மா அந்த வீட்டிற்கு வந்தது முதற்கொண்டு அவருடைய நான்கு வயதுக் குழந்தை பேபி சுந்திரமய்யரிடத்திலும் அவருடைய மனைவி ராஜம்மாளிடத்திலும் அளவு கடந்த அன்புகொண்டுவிட்டது. சுந்திரமய்யர் தம்பதிகளின் அன்புப் பார்வை ஒன்றே குழந்தைகளை வசீகரிக்கும் தன்மை கொண்டது. பிராமணக்குழந்தையை இங்கிலீஷில் 'பேபி' என்று அழைப்பது சுந்திரமய்யருக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. ஆனாலும் அந்தக் குழந்தையின் அழகு வடிவமும், புத்தி சாதுரியமும், அவர் சொல்லிக் கொடுத்ததை அது சிரித்துக்கொண்டு திருப்பிச் சொல்லும் தினுசும் அவர் மனதைக் கொள்ளை கொண்டன. சர்மாவின் மனைவி ஸ்வர்ணலதா. (அவளுடைய நிஜப் பெயர் கருணம்பாள். இது பிடிக்காததால் சர்மா இந்தப்புனைப் பெயரிட்டே அவளை அழைப்பது வழக்கம்) அவர்களுக்குப் பேபியைத்தவிர மோஹன் என்றும் சாந்தாராம் என்றும் முறையே எட்டுவயதும்ஆறுவயதும் ஆன இரண்டு பையன்கள் இருந்தார்கள். தன் குழந்தைகளிடம் அதிக அன்புடையவளாயிருந்தும் குழந்தைகளை வீட்டிலேயே விட்டுவிட்டு ஸ்வர்ணலதா சர்மாவுடன் பீச்சுக்கோ, சினிமாவுக்கோ, போவது வழக்கம். இப்பொழுது அப்படி விட்டுச் செல்வது மிகவும் சுலபமாகவும், கவலைக்கிடமில்லாமலும் ஆகி விட்டது. வீட்டில் சுந்திரமய்யரும், ராஜம்மாளும் இருக்கிறார்களே குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள!

சுந்திரமய்யருக்கு இந்த வழக்கம் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. 'பெற்ற தாய்க்குக் கூடவா தன் குழந்தைகளை வெறுக்கும்படி மனம் கசந்துவிட்டது, என்று நெஞ்சம் உருகுவார். மற்றும் சர்மாவைக் கண்டால் சுந்திரமய்யருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவருடைய தலையை எப்படி வேண்டுமானாலும் கத்தரித்துக்கொண்டு போகட்டும்; சர்மா சின்னஞ்சிறு பிள்ளைகள் இருவருக்கும் 'கிராப்' செய்து வைத்திருந்தார். முடிவாங்க வேண்டுமே, குடுமி வைக்க வேண்டுமே என்கிற பேச்சே கிடையாது. 'குழந்தைகளைச் சொல்லி என்ன பயன்? பெற்றோர்களைச் சொல்ல வேண்டும்' என்று மனம் சலித்துக்கொள்வார் சுந்திரமய்யர். சாஸ்திரத்தில் நம்பிக்கையிருக்கவேண்டாம்; நம்முன்னோர்கள் அனுசரித்து வந்த பழக்க வழக்கங்களில் ஒரு சிறிதேனும் பற்று இருக்கவேண்டாமா? எப்படியாவது சர்மாவுக்கு இவற்றை யெல்லாம் பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டுமென்று பேராவுடன் இருந்தார் சுந்திரமய்யர்.

வரவர சர்மாவின் நடத்தையில் சுந்திரமய்யருக்கு மிகுந்த வெறுப்பு உண்டாயிற்று. ஸ்வர்ணலதாவினிடம் ஒன்றும் குற்றமில்லை. கணவனிஷ்டப்படிதான் அவள் நடக்கிறாள் என்றும் அய்யர் தெரிந்து கொண்டார்.

சர்மாவுக்கு கண்ட இடத்தில் துப்புவது என்ற கெட்ட பழக்கம் இருந்தது. குளிக்கும்போது 'சோப்' தேய்த்துக்கொள்ளும் வழக்கம் ஒன்றுதான் ஏற்பட்டிருந்ததே தவிர, தினசரி ஸ்னானம் செய்யும் வழக்கம் ஏற்படவில்லை. இன்னும், அவர் வீட்டுப் பகுதியில் எங்கு பார்த்தாலும் 'டுத் பேஸ்ட்' பெட்டிகளும், முக க்ஷவரக்கத்திகளும் சிதறிக்கிடந்தன. வீடு வாசலெல்லாம் குப்பை கூளம். குழந்தைகளின் சுத்தத்தையும், தேகஸ்திதியையும் சிறிதும் கவனிப்பதில்லை அவர்.

* * *

ஒரு நாள் காலையில் சர்மா தன் அறையில் வெளிச்சம் போதாததால் வீட்டுத் தொட்டியின் ஓரத்திலுள்ள தாழ்வாரத்தில் சாய்வு நாற்காலி ஒன்றை இழுத்துப்போட்டு, அதில் உட்கார்ந்து கொண்டு தினசரிப் பத்திரிகை

ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தார். அந்த சமயம் ஸ்வர்ணலதா காபி கொண்டு வந்து வைக்கவும், அதை அரைவாசி குடிப்பதற்குள்ளேயே, காபியில் என்ன கெடுதலோ என்னமோ, வாயில் ஊற்றிக்கொண்டதை அப்படியே நடு முற்றத்தில் கீழே உமிழ்ந்தார் சர்மா.

இதைப்பார்த்துக் கொண்டிருந்த சுந்திரமய்யர், அந்தக் காபியின் குணதிசயங்களை சர்மா எடுத்துக் கூறு முன்பாகவே, "ஸார், இப்பொழுதுதான் அலம்பின தொட்டி. நட்ட நடுவிலே துப்பியிருக்கிறீரே. ஒரு ஓரத்தில் சாக்கடையிருக்கிறதே, அங்கே துப்பினால் என்ன?" என்று கேட்டுவிட்டார்.

"அந்த வாசற்கூட்டி மறுபடி தண்ணி கொட்டி அலம்பிட்டுப் போரு. நீங்கள் ஏன் விசாரப்படுகிறீர்கள்" என்று கேட்டார் சர்மா சாவதானமாக.

"அப்படியில்லை. நமக்குள்ளே இங்கே துப்பணும், இங்கே துப்பக்கூடாது என்று ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டாமா? அதிலேயும் நீங்கள் படித்தவாள். நீங்கள் இப்படி.............."

சர்மாவுக்கு இப்பொழுது தான் படித்தவர் என்று காட்டிக்கொள்ள ஆசை ஏற்பட்டது.

"நான் படித்தவன்.........நீ படிக்காத மடையன். உள்ளுக்குள்ளே ஆயிரம் அழுக்கு, அது யாருக்குத் தெரியும்? எச்சிலாம், துப்பலாம்; வாயிலே எச்சிலை வைத்துக்கொண்டு பேச வந்துட்டியே பிராம்மணா!" என்று பட பட என்று ஆரம்பித்தார் சர்மா.

"கொஞ்சம் அடக்கி மரியாதையாய்ப் பேசும் ஐயா! வீடெல்லாம் ஒரே குப்பை, எங்கும் ஒரே க்ஷவரக்கத்தி, 'டூத் பேஸ்ட்' பெட்டி, பிராமணன்னு சொல்லிக்கிறதற்கு யோக்யதை யிருக்காங்காணும் உமக்கு? இதெல்லாம் போகட்டுமே, சின்னஞ் சிறு பசங்களுக்கு கிராப்பாம் 'கிராப்'........."

"நான் என்னிஷ்டப்படி என்னவாகிலும் செய்வேன், உன்னைக் கேட்கவில்லையே......" என்று சுந்திரமய்யர் பேச்சில் குறுக்கிட்டார் சர்மா.

"என்னைக் கேட்டதற்கும், கேட்காததற்கும் நான் சொல்லவரவில்லை. பொதுவாகச் சொல்லுகிறேன். வெள்ளைக்காரன் தலையைக் கத்தரிச்சுண்டால், நீயும் அதேமாதிரி கத்தரிச்சுக்கணும்னு யாரய்யா சொன்னது?" என்றார் சுந்திரமய்யர்.

"யார் சொன்னாளோ, எவா சொன்னாளோ. உனக்கிஷ்டம் இருந்தால் நீயும் கத்தரிச்சுக்கோயேன்......"

"அட போங்காணும், சிறு பயகளைப் பறப்பயகமாதிரி நாசம் பண்ணிப்பிட்டீர்......"

இவ்வளவு நாகரிகமுள்ள சர்மாவுக்குத் தன் பிள்ளைகளைப் பறையர்களுடன் ஒப்பிடுவது கடுங்கோபத்தை விளைவித்தது. 'ஹரி ஜனங்கள்' என்று குறிப்பிட்டிருந்தாலும் பக்குவமடையாத அவருக்குக் கோபம் நிச்சயமாக வந்திருக்கும். அதனால் உடனே சடபுடவன்று, ஆரம்பித்தார் சர்மா.

"அட போடா, மஹாப் பிராம்மணன் இவன். 'கிருஷ்ண ராமா'ன்னு கத்திப்பிட்டா சாஸ்திரம் தெரிஞ்சதாக பிரமாதப் படுத்துகிறது."

"அடே அப்பா, இப்பவாவது 'கிருஷ்ண ராமா'ன்னு வாயில் வந்ததே. உன் குழந்தைகள் அந்தமட்டில் க்ஷேமமடையட்டும்."

"என் குழந்தைகள் எக்கேடு கெட்டால் உனக்கென்ன? அஞ்சாறு குழந்தைகளைப் படைத்தவன்போல் ஆசீர்வாதம் செய்கிறான். ஒரு குழந்தைக்கு வழியில்லை........."

இதற்குமேல் சுந்திரமய்யருக்குப் பொறுக்கவில்லை. "உன் குழந்தைகளை வச்சிண்டு சவரக்ஷணை பண்ற பவுசுதெரியாதா என்ன? ......அதிகமாக வளர்த்தவேண்டாம்...நான் தெரியாமல் குடிவைத்துவிட்டு........." என்று சொல்லிக்கொண்டே சுந்திரமய்யர் அவசர அவசரமாக ஒரு காகிதத்தை எடுத்து என்னவோ எழுதி, "இதோ வீட்டைக் காலிபண்ணும். இந்தாரும் ஒரு மாத நோடீஸ்" என்று சர்மாவிடம் நீட்டினார்.

சர்மா கோபத்தில் நோடீஸை வாங்கிக் கிழித்துப் போட்டுவிட்டு தம் அறைக்குள் சென்றார்.

* * *

அன்று சாயங்காலம் ஆபீஸிலிருந்து ஐந்து மணிக்குத் திரும்பிவந்தார் சுந்திரமய்யர். ஸ்வர்ணலதாவும், சர்மாவும் வழக்கம்போல் குழந்தைகளை விட்டு விட்டு, பீச்சுக்கோ, வேறு எங்கேயோ சென்றுவிட்டனர். சுந்திரமய்யர் வீட்டிற்குள் புகும்போதே பேபியின் மழலைச் சொற்கள் அவர் காதில் விழுந்தன. பேபி ராஜம்மாளுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

"என் அம்மாமி, எங்கப்பாவும், மாமாவும் இன்னிக்கிக் காத்தாலே சண்டெ பிடிச்சுண்டா?" என்று கேள்வி கேட்டாள் பேபி.

"பேபி! உன்னேயேன் பீச்சுக்கு அழைச்சிண்டு போகலேன்னு கேட்டேன். உன் அப்பா 'நான் அப்படித்தான் அழைச்சிண்டு போகமாட்டேன். உன்னே யார் கேட்டது' ன்னு...." என்று ஆரம்பித்தார் உள்ளே வந்த சுந்திரமய்யர்.

"இல்லெ மாமா! நீங்க பொய் சொல்றேள். அப்பா காபியைத்துப்பினுன்னு தானே சண்டெ..." என்ருள் பேபி. சுந்தரமய்யர் வாய் பேசாமல் வாத்ஸல்யத்துடன் பேபியைப் பார்த்தார்.

"தினம் போகும்போது குழந்தைகளேப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுப் போவாள் ஸ்வர்ணலதா. இன்னிக்குத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லே," என்று சொன்னுள் ராஜம்மாள் சுந்திரமய்யரிடம்

"அதிலென்ன தப்பு இருக்கிறது? அவளிஷ்டப்படி தானே அவள் நடக்கவேண்டும்" என்ருர் சுந்திரமய்யர் ராஜம்மாளிடம். "பேபி நான் பீச்சுக்குப் போறேன். நீயும் வரையா?" என்று சுந்தரமய்யர் கேட்டார். குழந்தையும் சரி என்றது.

பேபியை அழைத்துக்கொண்டு பீச்சுக்குப் புறப்பட்டார் சுந்திரமய்யர். மோஹனும், சாந்தாராமும் தெருவில் 'கிரிகெட்' விளையாடிக் கொண்டிருந்தனர். இருவரும் சேர்ந்தாப்போல், "பேபி, மாமா கூடப் பேசினுலே அப்பா அடிப்பேன்னுரே; பீச்சுக்கு வேரே போறயா?" என்ருர்கள்.

"அப்பா அடிச்சால், மாமா அடிக்க வேணும்னு சொல்லுவா, நான் மாமா பின்னேடு தான் போவேன்!" என்ருள் பேபி.

இரவு பேபிக்குச் சர்மாவிடம் நல்ல உதை கிடைத்தது. 'அவாத்துப்பக்கம் போனுல் காலே முறித்து விடுவேன்' என்று பயமுறுத்தினுர் சர்மா. சுந்திரமய்யருக்கு என் அழைத்துச் சென்ரேம் என்று ஆகிவிட்டது.

மறுநாள் காலேயில் ராஜம்மாள் சமையலறையில் ஏதோ அலுவலாக இருந்தாள். வாசற்படியண்டையிருந்து 'அம்மாமி!' என்ற இனிய குரல் கேட்டது. ராஜம்மாள் திரும்பிப்பார்த்தாள். குழந்தை பேபி! துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

"அம்மாமி! நீங்க என்னேடே பேசமாட்டேளா?" என்று கேட்டது குழந்தை பேபி.

"பேசுகிறேன் கண்ணு! இங்கே நீ நிக்கிறதைப் பார்த்தாலே அப்பா உன்னே அடிச்சு......" என்று அவளேயறியாமல் அழுதுவிட்டாள் ராஜம்மாள்.

பேபியின் கண்களிலிருந்து மள மள வென்று கண்ணீர் பெருகிற்று. பேபி அங்கே நிற்கவில்லே. அடுத்த நிமிஷம் தன் அம்மாவின் எதிரே நின்று கொண்டிருந்தாள். 'அம்மா' என்ருள். ஸ்வர்ணலதா பேபி அழுவதைப் பார்த்து திடுக்கிட்டாள்.

"அம்மா, அம்மா, அப்பா என்னே அடிச்சுப்பிட்டார்ன்னு அம்மாமி அழரு. நீ ஏம்மா இப்பொ அம்மாமியோடு பேசறதில்லெ......?"

என்ன இருந்தாலும் பெற்ற தாயல்லவா? தன் குழந்தையின் மனதை அக்கணமே அறிந்து கொண்டாள். ஆயினும் பதில் சொல்லத் தெரியாமல் கண்ணீர் உகுத்தாள்; புடவை முந்தானேயால் கண்களேத் துடைத்துக்கொண்டே இன்னும் அதிகமாக அழுதாள்.

---

## ஆசிரியர் அறிக்கை

"பாரதமணியில்" பிரசுரிக்க வேண்டிய சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவைகளே ஆசிரியர் "பாரதமணி" 7, வடக்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னே என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். எளிய நடையில் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளேத்தான் ஏற்றுக் கொள்ளப்படும். அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளேத் திருப்பி அனுப்பத் தபால் தலே ஒட்டிய கவர் வைத்து அனுப்புதல் அவசியம்.

ஆசிரியர்.

## அறிக்கை

"பாரதமணி" நிர்வாக சம்பந்தமான எல்லா கடிதப் போக்கு வரத்துக்களும், விளம்பரங்கள், பிளாக்குகள், யாவும் "மானேஜர்" பாரதமணி, 7 வடக்கு மாடவீதி, மைலாபூர் சென்னே என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். விளம்பரங்கள் யாவும் புதன்கிழமைக்குள் நமது காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டும். பாரதமணியில் மதிப்புரைக்கு அனுப்பப்படும் புத்தகங்களும் மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகளும் ஆசிரியர் விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

மானேஜர்.

# ரூபாயின் எதிர்காலம்

நாணய மாற்றின் தற்கால நிலைமையை ஆராயப் புகுவதே மிகவும் சிரமமாகஇருக்கும் பொழுதுஎதிர்காலத்தைப் பற்றிச்சொல்வதும் அபாயமாகும். ரூபாய் விகிதம் என்று சொல்லப்படுவது ரூபாய்க்கும் பவுன் ஸ்டெர்லிங்குக்கும் இருக்கும் மாற்று விகிதத்தைத் தான் குறிக்கிறது. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களுக்காக நமது நாணயத்தை மற்ற நாணயத்துடன் இணைப்பது அவசியமாதலால், அந்த நாணயமாற்று நடப்பதற்கு ஒரு பொது விகிதத்தை நாம் ஏற்படுத்தியாகவேண்டும். 1931-ம் வருஷத்திற்கு முன்னால் உலகம் முழுவதும் 'தங்க நிர்ணயம்' என்பதுதான் அமுலில் இருந்தது. ஆனால் ஸ்டார்லிங் தங்க மதிப்பை இழந்த வருஷத்தில், பல தேசங்கள் புத்திசாலித்தனமாக நாணயச் செலாவணியை ஸ்டார்லிங்குடன் இணைத்துக் கொண்டன. இந்தியாவும் அப்படித்தான் செய்தது. இது நல்ல கார்யமாக முடிந்தது. இதனால் ரூபாயின் மாற்று விகிதம் 1 ஷில்லிங் 6 பென்ஸ் தங்கத்திற்குப் பதிலாக 1 ஷி. 6 பெ. ஸ்டார்லிங்காகக் குறைந்தது. இன்னும் 1938 ஜனவரியிலிருந்து ஸ்டார்லிங்கின் தங்கமதிப்பு இன்னும் ஐந்து சத விகிதம் குறையவே, ரூபாய் பெறுமானமும் குறைந்தது. இன்றைக்கு ரூபாய் அதன் தங்க சமானத்திற்கு 42 சத விகிதம் குறைந்திருக்கிறது.

நாணயச்செலாவணி சம்பந்தமாக உலகம் தன் அனுபவத்திலிருந்து என்ன தெரிந்து கொண்டிருக்கிறதென்றால், நாணயமாற்று விகிதம் அடிக்கடி மாறுவது வியாபாரத்திற்குக் கெடுதல் என்று தான். இன்னும் சர்க்கார் வரவு செலவு திட்டத்தை நிர்ணயிப்பதும் கஷ்டம். வியாபாரமும், தொழிலும் சீரழிந்து போய் விடும். மாற்று விகிதத்தை அடிக்கடி குரங்குத்தனம் பண்ணுவது தவறு. வியாபார மந்தத்தால் பல தேசங்களும் தங்கள் நாணயச் செலாவணியின் பெறுமானத்தைக் குறைத்துக் கொண்டுவிட்டன. இப்படிக்குறைத்துக்கொண்ட தேசங்கள்பொதுக் காரியங்களிலும் பொருள் விலையை நிர்வகிப்பது முதலிய இன்னும் பல துறைகளிலும் முக்கியமான திட்டங்களையும் கைக்கொண்டிருக்கின்றன. ஆயுத முஸ்தீப்புத் திட்டத்தால் தான் 1936-ம் வருஷத்திலிருந்து மேல் நாடுகள் மீண்டும் சௌகரியத்தைப் பெற்றன.

நமது ராஜீய வாதிகளில் சிலர் ரூபாயின் பெறுமானத்தை இன்னும் கொஞ்சம் குறைக்கவேண்டும் என்கிறார்கள். ரூபாயின் பெறுமானம் மிதமிஞ்சி அதிகமானால், அதன் நாணய மாற்று விகிதத்தை இப்போது இருக்கும் நிலையில் வைத்துக் கொள்ள முடியா விட்டால், அப்படிச் செய்யலாம். 1933-ம்வருஷத்திலிருந்து ரூபாயின் மாற்று விகிதம் பலமடைந்திருக்கிறது. சமீப காலம் வரையில் ரூபாய் விஷயத்தில் ஒன்றும் சிரமம் ஏற்படவில்லை. ஏராளமான ஏற்றுமதி இதற்கு உதவி செய்தது வாஸ்தவம்தான். சில மாதங்களாக நாணயமாற்றில் கொஞ்சம் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ரிசர்வ் பாங்க் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளால் நாணயமாற்று சுலபத்தில் சரிப்பட்டுப்போயிற்று. மாற்று விகிதம் குறையுமானால் உடனே அரசாங்கம் செலாவணி விகிதத்தைக் குறைக்கவேண்டும்.

செலாவணி விகிதத்தை இந்தியாவில் குறைக்க வேண்டுமென்பவர்கள், நாணய மாற்றை சீர்படுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை; தேசத்தின் பொருளாதார நிலைமையை சீர்படுத்துவதற்காகத்தான், அப்படிக் குறைத்தால் இந்திய சாமான்களின் விலை குறைந்துவிடுமென்றும், வெளிநாட்டார் சுலபமாக வாங்குவார்களென்றும், இதனால் ஏற்றுமதி அதிகமாகுமென்றும் நினைக்கிறார்கள். இன்னும் சிலர் பொருள்களின் விலை அதிகமாகுமென்றும் அதனால் பொருளாதார நிலைமை சரியாகுமென்றும் சொல்கிறார்கள். ஆனால் மேற்சொன்ன இருவகை எண்ணங்களும் ஒரே சமயத்தில் பூர்த்தியாகாது என்பது நிச்சயம். முதல் எண்ணத்தைக் கொண்டவர்கள் இந்தியாவின் ஏற்றுமதியை விலைவாசிகளின் ஏற்றத் தாழ்வு பாதிக்க முடியாது என்பதை மறந்துவிடுகிறார்கள். இந்தியாவின் ஏற்றுமதி குறைவாயிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் ஐரோப்பாவின் நாணயமாற்று நிர்ப்பந்தங்கள், விவசாயக் காப்புகள் இவைகள்தான். தேசத்தில் பொருள்களின் விலையை ஏற்றுவது என்பது நமது லக்ஷியமாயிருந்தால், அதிலும் நாம் தோல்வியடைய வேண்டியதுதான். ஏற்றுமதிப் பொருள்களின் விலை சற்று அதிகமாவதாக வைத்துக்கொள்வோம். ஆனால் மொத்த விளைவில் 5 சத விகிதம்தான் ஏற்றுமதி செய்

கிறேம். மாற்று விகிதம் குறைந்தால் இந்தப் பொருள்கள் விலை அதிகமாகும் என்று சொல்வது 'வால் நாயை ஆட்டு கிறது' என்று சொல்வதுபோல் இருக்கிறது. இப்படி மாற்று விகிதம் குறைவதாலும் ஏறுவதாலும் தரகர்கள் சிலருக்குப் பிரயோஜனம் உண்டாகலாம். ஆனால் விவசாயிக்கு என்ன பிரயோஜனம்? இதனால் சிலருக்குப் பிரயோஜனம்; ஆனால் எல்லோருக்கும் பளு.

நாணயமாற்று சம்பந்தமாக நாம் எப்போதும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உலக நிலைமையை கவனிக்கும்போது நாணயமாற்று விகிதம் எப்போதும் ஸ்திரமாக இராது என்று அறிகிறேம். எப்போதுமே, ரூபாய் ஸ்டர்லிங்குடன் இணைக்கப் பட்டிருக்க முடியாது. ஸ்டர்லிங் நமது நாணயச் செலாவணியை அதன் கஷ்ட நிலைமையில் காத்து வந்திருக்கிறது. சந்தர்ப்பம் மாறும்போது இந்த இணைப்பினால் நமக்குக் கஷ்டமுண்டாகாமல் கூடிய சீக்கிரத்தில் இந்த விஷயத்தைப்பற்றி நாம் ஆலோசனை பண்ணவேண்டிய சந்தர்ப்பம் வரும். அதுவரைக்கும் நாம் அவசரப்படக்கூடாது.

ஜனங்களின் வறுமையைப்பற்றித்தான் நாம் கவனிக்க வேண்டும். உற்பத்திக் குறைவும் போதுமான வேலையின்மையும் தான் வறுமைக்குக் காரணம். 18 பென்ஸ் விகிதம் இதற்குக் காரணமல்ல. விகிதத்தை 16 பென்ஸாகக் குறைத்தால்கூட நிலைமையை மாற்ற முடியாது. உற்பத்தியை அதிகப்படுத்தி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கினால்தான் வறுமை ஒழியும். நாணயமாற்றுப் பிரச்னையில் இறங்கி நமது செல்வத்துக்கு ஹானி விளைவிக்கக் கூடாது. தொழிலபிவிருத்தியைப் பற்றி பிரம்மாண்டமான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சரியாக அமைத்து நடத்தினால், எல்லோருக்கும் வேலை கிடைக்கும், வறுமையும் ஒழியும். முக்கியமாக விவசாயத்தொழில் அபிவிருத்தி அடைந்தால்தான் பெரும்பான்மை மக்களுக்கு நன்மை உண்டு.

(டாக்டர் பி. ஜே. தாமஸ்)


## அது ஒரு பலமான கோட்டை

65,000 எண்ணிக்கைக்கு அதிகமாகவேயுள்ள தனது பாலிஸிஹோல்டர்களுக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகவே புரிந்துவந்திருக்கும் உண்மையான சேவை என்னும் அசையாத கற்கோட்டையில் தன் கீர்த்தியை நாட்டியிருக்கும் 'நாஷனல்' உறுதியில் நிகரற்றது.

பாலிஸிதாரர்களுக்குத் தாராளமாய்ச் சலுகை காட்டுவதிலும், உரிமைகளை உடனுக்குடனே தீர்த்து வைப்பதிலும் இது மிகப் பிரசித்திபெற்ற ஸ்தாபனம். வியாபாரமந்தம் போன்ற பல ஆபத்துக் காலங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு இதனுடைய பாலிஸி உண்மையிலேயே நல்ல மூலதனம்.

**நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,**

(தலைமை ஆபீஸ்: கல்கத்தா)

**நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,**

**எஸ்பிளனேட், மதராஸ்.**

# நீர் நாய்

[தேவதத்தன்]

குரங்கு சைந்நியம் படைத்த அரசன் கதை தெரியுமா? ராணுவத்துக்காக ஏராளச் சிலவு ஆவதைப் பார்த்து அச்சிலவைக் குறைக்க எண்ணி அவனுடைய மந்திரி சொன்ன யுக்தி அது. "குரங்குகளுக்கு உணவு நாம் தேடுவது அவசியமில்லை. மரம் மட்டைகளிலும் தோப்புத் துறவுகளிலும் வேண்டியதைத் தேடிக் கொள்ளும். செய்வதைச் செய்யும் சுபாவம் உள்ள அவைகளைச் சீக்கிரம் ராணுவப் பயிற்சிகளில் பழக்கிவிடலாம்" என்று அவன் சொன்னதை அங்கீகரித்து அரசனும் தன் மனிதப் படைகளைக் கலைத்துக் குரங்குகளுக்கு துப்பாக்கிப் பிரயோகம் முதலான வித்தைகள் கற்றுக் கொடுத்துப் பெரும் படை தயாரித்தான். அடுத்த தேசத்து அரசன் இதைக் கண்டு படையெடுத்து வரவே, குரங்கு சைந்நியமும் அவன் போர் வீரர் நடுங்கும்படி ஆரவாரித்துக் கொண்டு —ஹனுமார் இனமல்லவா—எதிர்க்கப் புறப்பட்டது. இரு சேனைகளும் சந்தித்தன. அச்சமயம் எதிர்தரப்பு மந்திரியின் உத்தரவுப்படி பட்டாணிக்கடலையை மூட்டை மூட்டையாகக் கொணர்ந்து குரங்குப் படை நடுவே வாரி யிரைத்தனர். அவ்வளவுதான்! துப்பாக்கிக் கட்டைகளைப் பொத்துப் பொத்தென்று கீழே எறிந்துவிட்டுக் கடலையைப் பொறுக்கக் குரங்குகள் பாய்ந்தன. எதிரியும் சிக்கனம் செய்த அரசன் மேல் பாய்ந்து அவனை சிறைப்படுத்தி ராஜ்யத்தைக் கைப்பற்றினன்.

இந்தக் கதையை என் இளம்பிராயத்தில், கேட்டபோது "நமது தெருக்களிலும் ரஸ்தாக்களிலும் இரவில் வெளிச்சம் போட மின்சாரம் முதலானதற்கு வீண் சிலவு செய்கிறார்களே, மின் மினுப் பூச்சிகளைப் பிடித்து அவைகளின் பிரகாசத்தால் வெளிச்சம் போடலாகாதா," என்று நான் எண்ணியது தெரியாத்தனம் என்று உணர்ந்தேன். ஆனல் சில நாளைக்கு முன்பு யுனைடெட் ஸ்டேட்ஸில் நடக்கும் ஒரு ராஜீய தந்திரத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட பிறகு நான் சிறு பிள்ளையாயிருக்கும் போது செய்த யோசனை அவ்வளவு அசட்டுத்தனமாகத் தோன்றவில்லை. இருந்தாலும் நான் சொல்லப்போகும் கதையைக் கேட்டு நீங்களே தீர்மானியுங்கள்.

வட அமெரிக்காவில் ஐடாகோ என்ற பிரதேசத்தில் பூமியின் செழிப்புக்குக் காரணமான மலையருவிகளில் வெள்ளம் குறைந்து வருகிறது. மலை மேல் பெய்யும் மழை நாலா பக்கங்களிலும் சிதறிப் போவதால் இப்படி நேருகிறது என்று கண்ட அதிகாரிகள் அணைகள் போட்டு தண்ணீரைத் தேக்கி அருவிகள் வழியே வேண்டியபோது விடலாமென்று யோசித்திருக்கிறார்கள். கூலியாட்களைக் கொண்டு இந்த அணைகள் போடுவதாயிருந்தால் ஜாஸ்திப் பணச் சிலவாவதோடு வேலையும் சீக்கிரம் ஆகாதென்று கருதி ஒரு யுக்தி செய்திருக்கிறார்கள். அந்த தேசத்தில் (ஆங்கிலத்தில் Beaver என்று சொல்லப்படும்) நீர் நாய்கள் உண்டு. ஒவ்வொன்றுக்கு ஐந்து டாலர் (சுமார் பதினைந்து ரூபாய்) வீதம் 600 நீர் நாய்களை வேடர்களைக் கொண்டு பிடிக்கச் சொல்லி விலைக்கு வாங்கி, மக்காச் சோளம், ஆப்பிள், ரொட்டி முதலான உணவு பொருள்களை அவைகளுக்குத் தந்து அவைகளைக் கொண்டே வேண்டிய அணைகளைக் கட்டுவிப்பது என்று தீர்மானித்திருக்கிறார்களாம். இது ஆச்சரியமல்லவா?

நீர் நாய்கள் அணைகட்டுவதில் பிறவியிலேயே தேர்ச்சி பெற்றவை. ஜலத்தில் உண்டாகும் அல்லித்தண்டு, தாமரைத்தண்டு, கோரைப்புல் முதலிய உணவு பொருள்களையே அவை உட்கொள்ளுவதால் நீர் நிறைந்த விடங்களிலேயேதான் அவை வசிப்பது. சிறு குட்டைகளிலும் மற்ற நீர்த் தேக்கங்களிலும் உள்ள தண்ணீர் குறைந்தால் கஷ்டம் நேரிடுமே என்று சமீபத்திலுள்ள கால் வாய்களிலும் சிற்றாறுகளிலும் குறுக்கே அணைகட்டி ஜலத்தைத் திருப்பித் தாம் வசிக்கும் ஜலாசயங்களை நிரப்பிக் கொள்ளும் பழக்கமுள்ள இந்த ஜந்துக்களுக்கு முக்கியமான கருவி நான்கு கூரிய பற்களே. இந்தப் பற்கள் தேய்ந்தால் புதுப் பற்கள் முளைக்கின்றன. உடைந்தாலும் தானகவே செப்பனிடப்படுகின்றன. இது எவ்வளவு அவசியம் என்பது அவை செய்யும் காரியத்தை நோக்குமளவில் விளங்கும்.

அணைகட்ட எண்ணினல் இளம் போத்துக்களை தம் பற்களால் கடித்து வெட்டித்தள்ளும். கால்மணி நேரத்தில் ஒரு நீர் நாய் மூன்றங்குலச் சுற்றளவுள்ள போத்தை வெட்டித் தள்ளுமென்றால் அந்தப் பற்களுக்கு எவ்வளவு பலமிருக்குமென்று நீங்களே யோசியுங்கள். போத்துகளை வெட்டிக் கிளைகளைக் கழித்து அடிக் கட்டையை அணைகட்ட வேண்டிய

விடத்திற்கு இழுத்துச் செல்லும். அப்படி இழுக்க முடியாதபடி அதிக கனமாயிருந்தால் சிறு கால்வாய்கள் வெட்டி அவைகளில் ஓடும் ஜலத்தில் கட்டைகளை மிதக்கவிட்டுக் குறிப்பிட்ட இடம் கொண்டு வந்து சேர்க்கும். இப்படி வெட்டப்பட்ட கால்வாய் ஒன்று 675 அடி நீளம் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்தக் கால்வாய்களில் கலுங்குகள் கூட வேண்டிய விடங்களில் நீர் நாய்கள் தயாரிக்கின்றன வென்றால் அவைகளின் புத்திக் கூர்மை எப்பேர்ப்பட்டதாய் இருக்க வேண்டும்?

கட்டையை அடைபட வேண்டிய கால்வாயில் பருத்த பக்கம் மேல் புறம் இருக்கும்படி வைத்து, தண்ணீர் அதை அடித்துப் போகாதபடி கீழ்ப்புறம் கழிக்கப்பட்ட மொட்டைக் கிளைகள் தாங்கச் செய்து, கற்களையும் கொம்புகளையும் கொண்டு இடுக்குகளில் கொடுத்து, அணையின் உள் வாயில் உலர்ந்த சருகுகளைச் சுமர்த்தி அதன் மேல் மண்ணையப்பி அணையை இவை கட்ட, தண்ணீரில் வரும் வண்டல் அதன்மேல் படிந்து அணை தானகவே வலுப்பட்டுவிடும்.

இவ்விதம் ஜீவாதாரமான நீர்த்தேக்கத்தைச்செய்து கொண்டு நீர் நாய் தன் குடியிருப்புக்கு வசதி தேடிக் கொள்ளும். நீர் நாய்கள் கட்டும் 'வீடுகள்' இருவகைப்படும். ஜலாசயத்தின் கரையிலேயே பொந்து குடைந்து நீர் மட்டத்துக்குக் கீழ் உட்புகுவதற்கு வழிவைத்து, காற்று நுழைவதற்கு மேற்புறம் ஒட்டை செய்து அந்த ஒட்டையை பாக்கி மிருகங்களுக்குத் தெரியாமல் சிறு கொம்புகளால் மறைத்து அதில் குடியிருப்பவை அநேகமாக வயதானவும், உடம்பு வணங்காதவனவும், பெண்டாட்டி பிள்ளை இல்லாதனவுமான நீர் நாய்களே. ஸம்ஸாரம் வலுத்துப் பொறுப்புள்ள நீர் நாய்களோ ஜலத்துக்கு நடுவேதான் தங்கள் சுரங்கங்களைக் கட்டுவது. அவசரமாய் உட்செல்ல ஒரு குறுக்கு வழியும் ராஜபாட்டையாய்ப் போக வளைந்து வளைந்து செல்லும் மற்றொரு வழியுமாக நீர்மட்டத்துக்குக் கீழுள்ள இரண்டு திறப்புகளோடு அமைக்கப்பட்ட இந்த இடங்கள் கொம்புகளைக் கொண்டு கட்டப்பட்ட அறைகள் போன்றன. உள்ளே கொஞ்சமும் ஈரம் படாமல் நீர் மட்டத்துக்கு மேல் எழுப்பப்பட்ட கொம்புத் தரையில் குடும்பம் நடத்தும் நீர் நாய்களுக்கு மேலே மூடப்பட்ட கொம்புகளின் இடுக்கு வழியேவரும் காற்றுப் போதும். இங்கே பெண் நாய் வருஷம் தோறும் குட்டிப்போட்டுக் குட்டிகளை மூன்று மாதம் பால் கொடுத்து வளர்க்கும். அச்சமயங்களில் ஆண் நாய் மனம் போனபோக்காய் வெளியே திரிந்தாலும், தன் குழந்தைகள் 'குவாங் குவாங்' என்று கத்தும் காலம் கடந்ததும் திரும்பி வீடு சேர்ந்து குடித்தனக் காரியங்களை மும்முரமாய்ப் பார்ப்பதோடு அணைக்கு யாதொரு அபாயமும் நேரிடாமல் வெகு ஜாக்கிரதையாய்ப் பாதுகார்த்தும் செப்பனிட்டும் வரும்.

இந்த நீர் நாய்களின் புத்தி நுட்பமும் விடா முயற்சியும் வியக்கத்தக்கனவே. ஆனாலும் அமெரிக்கா தேசத்து அதிகாரிகள் இஷ்டப்படி இவை அணை போடும் என்பது என்ன நிச்சயம்? இதை யோசிக்குமளவில் 'மின் மினுப் பூச்சி இஷ்டம்போல் பறக்கட்டும். மின்சாரம்தான் நமக்குத் தோது' என்று எனக்குத் தோணுகிறது. உங்கள் அபிப்பிராயம் என்ன?

---


## ஹிந்தி-தமிழ் ஆசான்

இப்புஸ்தகத்தின் உதவியினால் இரண்டு மாதத்திற்குள் இந்துஸ்தானி பேசக் கற்றுக்கொள்ளலாம்.

புஸ்தகத்தின் விலை ரூ. 1-4-0
தபால் சிலவு ரூ. 0-4-0

புஸ்தகம் கிடைக்குமிடம் :—

ம. ரா. அப்பாதுரை, புஸ்தக வியாபாரி,
57, ஆண்டர்சன் வீதி, எஸ்பிளனேட்,
மதறாஸ்.

# சினிமாச்சுருள்

அன்று நடந்த சென்னை பிலிம் லீக் விழாவின்போது ஸ்ரீ ஜி. ஏ. நடேசன் கிராமத் தொழில்களைப் படம் பிடித்து விவசாயத்தின் மேன்மையைத் தெரியப் படுத்தலாம் என்று கூறினார். விவசாய சம்பந்தமான படங்கள் உபயோகமுள்ள தாகும். 'குட் எர்த்' (நல்ல பூமி) என்ற படம் விவசாய சம்பந்தமானது. அது உலகில் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருப்பதை உத்தேசிக்கும்போது அம்மாதிரிப் படங்களை விவசாய இந்தியாவில், முக்கியமாக, தமிழ் நாட்டில் வரவேற்க வேண்டும்.



(கோபால கிருஷ்ணாவில் ராம்மராதே)

* * *

கிராமங்களில் கல்வி பரப்புவதற்கேற்க படங்களையும் பிடிக்க வேண்டுமென்று ஸ்ரீ நடேசன் கூறினார். இப்படிப்பட்ட உபயோகமான யோசனைகளை தமிழ்ப்பட முதலாளிகள் ஏற்றுக் கொள்வார்களா என்பது தான் நமது சந்தேகம்.

* * *

மயூரா பிலிம்ஸார் தங்கள் 'அதிர்ஷ்டம்' என்ற படத்தை பூர்த்தி செய்து விட்டார்களாம். இன்னும் சில சடங்குகள் முடிந்த பிறகு அது வெளியே கிளம்பும் என்று தெரிகிறது.

* * *


ஸ்ரீராமானுஜர் படத்தை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி யிருப்பதாகத் தெரிகிறது. அதன் சில பாகங்களை வெட்டி எடுத்துவிட்டு இன்னும் சில அம்சங்களைச் சேர்த்துப் பொருத்தி விட்டுத்தான் மறுபடியும் வெளியே கொண்டுவரப் போகிறார்களாம். அந்தப் படம் தீர்க்காயுசாக இருக்க வேண்டுமென்றும் இந்த சிகித்சையினால் ஆபத்தில்லாமல் தப்பிப் பிழைக்கவேண்டுமென்றும் பிரார்த்திக்கிறோம்.

* * *

'விமோசனம்' என்ற படத்தை வெகு வெகு வேகமாகத் தயாரிப்பதாகத் தெரிகிறது. இந்தப் படத்தால் உண்மையில் தமிழ் சினிமாக் கலைக்கு விமோசனம் உண்டா என்ற கேள்வியை பலரும் கேட்கிறார்கள்.

* * *

ஆந்திரா ஸினிடோனில் டைரக்டர் ராமசேஷன் 'கிராதார்ஜுனா'வை அவசரம் அவசரமாகத் தயாரித்துக்கொண்டிருக்கிறாராம்.



(இன்பசாகரனில் ராஜமாணிக்கம்)

* * *

'ஸ்வர்ணலதா' என்ற படம் புது தினுசில் தயாரிக்கப்பட்டிருக்கிறதாம். ஸ்ரீ ஒய். வி. ராவ் நடிப்பு புது மாதிரியாயிருக்கிறதாம். இருக்கட்டும்! நாமும் புது தினுசில் போய்ப் பார்த்துவிட்டு வருவோம்.

# முத்துஸ்வாமி தீக்ஷிதர்

[என். சிதம்பர சுப்ரமண்யன்]

(சென்ற வாரம் தீக்ஷிதருடைய 103-வது சிராத்த தினம் கொண்டாடப் பட்டது.)

ஆபீஸிலிருந்து வந்து அப்பொழுது தான் சட்டையைக் கழற்றிக்கொண்டிருந் தேன். ஆபீஸ் தொல்லைகளைக் கழற்றி யெறிந்துவிட்டு, வீட்டுத் தொல்லைகளைத் தாங்கி நிற்கத் தயாரா யிருந்தது மனம். அப்பொழுது, பக்கத்துக் கோயிலில், அம்பிகையின் சன்னதியில், நாகஸ்வரக் காரன், கை விரல்களை மூடிமூடித் திறந்து ஜாலம் செய்துகொண்டிருந்தான்.

"மீனலோசனி, பாசமோசனி, ஸ்ரீகதம்பவனவாசனி" — இவ்வார்த்தைகள் சப்தரூபத்தில் வந்து மோதின. மனம் கட்டுகளை உதறி எறிந்துவிட்டு, கனவு லோகத்தில் மிதக்க ஆரம்பித்தது. அது தீக்ஷிதர் கிருதி.

தீக்ஷிதரின் கிருதிகள், மலை யுச்சிகளினின்று அலறிக்கொண்டு ஆவேசத்தோடு விழும் நீர்வீழ்ச்சிகளல்ல. எதிர்பாராத சமயத்தில், அடித்துக்கொண்டு போகும் காட்டாற்று வெள்ளமுமல்ல. களங்க மற்ற இரவினிலே, நிலவின் ஏக்கத்தில், தென்றல் இனிமையில், தனிமையின் துக்கத்தில், அசைந்து அசைந்து, தூக்கிச் செல்லும் அமைதியின் அலைகள். ஆத்மீக உணர்ச்சி பொங்கி வரும் பேரின்ப ஊற்றுகள்.

தீக்ஷிதர், நாதத்தின் கதவுகளைத் திறந்து காட்டி ராக ரத்னங்களை அப்படியே கொண்டுவந்து தருவதில்லை. அவைகளை, சுத்தம் செய்து, மெருகிட்டு, செதுக்கி, இழைத்து ஆபரணமாக்கியே கொண்டுவந்து தருவார். வெறும் கற்கள் கூட அவர் கைபட்டு, உயர்ந்த ரத்னங்களாகி விடுகின்றன.

ஸம்ஸ்கிருதத்தின் காம்பீர்யம், சவுக்க காலத்தில் அவர் இசைக்கும் மாதிரி, நடையின் போக்கு, இவையெல்லாம் சேர்ந்து, அவருடைய கிருதிகளுக்கு ஒரு தனியான பெருமையையும், தனி மாட்சியையும் கொடுக்கின்றன. பட்டத்து யானை பவனி வருவதுபோல், அவருடைய கிருதிகளின் பல்லவி, சரணங்கள், அசைந்து அசைந்து, ஒரு மிதப்புடன், ஆடி வருகின்றன.

எல்லா வாத்தியங்களிலும், தீக்ஷிதர் கிருதிகள், அழகோடு வெளி வந்தாலும், வீணையில்தான் அதிகம் சோபிக்கின்றன என்பது என்னவோ வாஸ்தவம்தான். அவருடைய அருமையான நகாசு வேலைகள், நுண்ணிய கமகங்கள் அற்புதமான சுவரச் சேர்க்கைகள், வீணையில்தான் நன்கு எடுப்பாகத் தெரியும்.

முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஓர் உயரிய சிற்பி. கோவில்களைப்போன்ற அவர் கிருதிகள், சிறந்த மாளிகைகள் ஆலயங்களைப் போலவே அமைப்பு, சொல்லிசை ஒழுங்கு இவைகளைக் கொண்டிருக்கின்றன. முழுமையாகக் கற்பனை செய்யப்பட்டு, தனித்தனிப் பாகங்களும் அழகு பெறப் பொருந்தும்படி, தனியாகச் செய்யப்பட்ட அங்கங்களை யுடையவை அவருடைய கிருதிகள்.

தீக்ஷிதரிடம் ஒரு தனிக் குணம் உண்டு. சாகித்தியத்தில் தெலுங்கிற்குப் பதிலாக ஸம்ஸ்கிருதத்தைக் கையாண்டார். மனத்தை உருக்கும் விளம்ப காலத்திலேயே, அநேக கிருதிகளைச் செய்திருக்கிறார். வேங்கடமகியையும் ஸம்பிரதாயத்தையும் பின்பற்றியே கீர்த்தனங்களைச் செய்திருக்கிறார். ராகங்களைப் பிழிந்து, அவைகளின் ரஸங்களைக் கொடுத்திருக்கிறார். மற்ற உயர்ந்த கலைகளை ரஸிப்பது போலவே, தீக்ஷிதர் கிருதிகளின் சுவையை நன்கு அனுபவிக்க, சங்கீதத்தில் பயிற்சியும், தேர்ச்சியும், சிறிது வேண்டியதுதான். தீக்ஷிதர் கீர்த்தனங்கள் எவ்வளவுக் கெவ்வளவு, அதிகம் தெரியுமோ, அவ்வளவுக்கவ்வளவு ஒருவன் சங்கீத ஞானம், விருத்தியடையும் என்பதில் மிகையில்லை.

உன்னத கற்பனை, ராகங்களின் ஸஞ்சாரங்களை அழகுபெறப் பொருந்தி வைக்கும் மாதிரி, நவ நவமான சங்கதிகளைக்

கொண்டு, ராகத்தின் சகல உயர்ந்த அம்சங்களையும் வெளிக் கொணர்தல், கீர்த்தனங்களை சொல்லிசையோடும் குழைவோடும் இருக்கும்படி அமைத்தல், இவைகள், அவருடைய கிருதிகளை மிகவும் உயர்ந்ததாகச் செய்கின்றன. நுணுக்கம், அமைப்பு, வழி, இவை தீக்ஷிதர் கிருதிகளின் தனிச் சிறப்புக்குக் காரணமாயிருக்கின்றன. ஒவ்வொரு கல்லாக வைத்துக் கட்டும் சிற்பியைப்போல், ஒவ்வொரு ஸ்வரத்தையும், ஒவ்வொரு சஞ்சாரத்தையும், திருத்திச் சீர்தூக்கிப் பார்த்து, தீர யோசித்து, பிறகுதான் சுருதியில் பதித்து வைத்துக் கட்டுகிறார்.

தியாகையருடைய கிருதிகளில் எந்த அமைப்பிலும், எந்தக் கட்டத்திலும் உணர்ச்சி நிரம்பிக் கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. தியாகையர் கிருதிகள் யதேச்சையாக, பக்தியின் ஆனந்தத்தில், வெறியின் வேகத்தில், உருகி வழிந்தவை. ஆனால், தீக்ஷிதரின் கிருதிகளிலோ, உணர்ச்சி வெள்ளம் நம்மை அடித்துக் கொண்டு போகவில்லையானாலும், அந்த இன்ப ஊற்றுகள், நம்முடைய ஆத்மாவை மிருதுவாக அலம்புகின்றன. மின்னலைப் போன்று தோன்றி, நம்மை பிரமிக்கச் செய்யாவிடினும், இருண்ட இரவில், நல்ல வைரங்களைப்போல, ஒளி வீசி, நம் பிக்கையைக் கொடுக்கின்றன. உழைப்பும், திறமையும், மனோதிடமும் நிறைந்த கீர்த்தனாசார்யர் தீக்ஷிதர். அவருடைய கிருதிகள், ராகரத்னங்கள் புதைந்து கிடக்கும் சிறந்த பொக்கிஷங்கள்.

---

சென்னை சினிமா

**அடுத்த வாரம்**

| | |
|---|---|
| Roxy : | "Submarine D—1" |
| Wellington : | Merrily We Live (with Constance Bennet & Brian Aherne) |
| Minerva : | Song of Freedom (with Paul Robeson) |
| ஸ்டார் : | தார்தி மாதா (ஹிந்தி) |
| பிராட்வே : | கோபாலகிருஷ்ணா. (ஹிந்தி) |
| சினிமா ஸென்ட்ரல் : | மாலபில்லா. (தெலுங்கு) |
| கெயிட்டி : | முசிரி துகாராம், |
| சாகர் : | 300 நாளும் அதற்குப் பிறகும். (ஹிந்தி) |
| பாரகன் : | பாக்ய லீலா. |


# கசின் அண்டு கம்பெனி

**(COUSIN & Co.)**

உயர்தர மரச்சாமான்கள்

தயார் செய்பவர்கள்

ஆபீஸ்களுக்கும், பாங்கிகளுக்கும்,

ஆஸ்பத்திரிகளுக்கும், வீடுகளுக்கும்

வேண்டிய எல்லா நவீன உயர்தர

மரச்சாமான்கள்

மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.

இதர இடங்களுக்குச் செல்லுமுன் ஒரு முறை

எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து

பாருங்கள்!

சாமான்கள் வாங்குமுன் எங்களை கலந்துகொள்ளுவது நலம். எங்கள் கம்பெனி "பர்னீசர்கள்" உங்களுக்குப் பூர்ண திருப்தி அளிக்கும்.

ஒர்க்ஷாப் :—

"சிடன்ஹாம்ஸ் கார்டன்ஸ்"

டிம்பர் டிபோ

சூளை.

ஆபீஸ், கம்பெனி பார்வையிடம் :—

**17-18, பிராட்வே,**

**ஜி.டி., சென்னை.**

# சினிமா வேண்டுமா?

(வே. சு. ராமகிருஷ்ணன்)

சினிமா அவசியமா? அதனுல் உலகத்திற்குப் பிரயோஜனம் உண்டா? மனித வர்க்கம் சினிமா இல்லாவிட்டால் கஷ்டப் பட்டுப் போய் விடுமா?— இந்தப் பிரச்னைகள் பல பேர்கள் மனதில் இப்போது குமுற ஆரம்பித்திருக்கின்றன.

'சினிமாவா? வேண்டாம். கடவுளே! அதிலிருந்து எங்களைக் காப்பாற்று!'' என்று கூச்சல் இப்போது எங்கு பார்த்தாலும் எழும்புவதைக் கேட்கிருேம். இப்படி சினிமா வேண்டாம் என்று சொல்லும் நண்பர்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

முதல் ரகத்தைச் சேர்ந்தவர்கள் "சினிமா சமூகத்திற்குக் கெடுதல். அதைக்கண்டதுண்டம் செய்து ஒழித்துவிடவேண்டும்'' என்று சொல்லும் கோபக்காரர்கள். இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்கள் கொஞ்சம் நிதானமாக "இந்த சினிமாதானே, கொஞ்சநாள் போனுல் தானே அழிந்து போய் விடுகிறது'' என்று சொல்பவர்கள். இவ்வாறு சினிமா இவர்கள் கடுங் கோபத்துக்காளான காரணத்தை நாம் சற்று ஆராய்வோம்.

"ஸ்வாமி! இந்த சினிமா வந்து ஒழுக்கத்தைக் குட்டிச்சுவராக்கிவிட்டது. குடும்ப வாழ்வைக் கெடுத்துவிட்டது. ஸ்திரீ தர்மத்தைக் குலைத்துவிட்டது. மொத்தத்தில், சமூகமே நாசமாய்ப் போய்விட்டது. உடனே சினிமாவைப் பொசுக்குங்கள்'' என்று ஒரு சாரார் கதறுகிருர்கள்.

"ஐயா! இந்த சினிமாவை என் கட்டிக்கொண்டு அழுகிறீர்கள்? அதனுல் நமது பழமையான கலைக்குப் பிரயோஜன முண்டா? மேல் நாட்டிலிருந்து இங்கு வந்து சேர்ந்த குருட்டுக் குழந்தையை நாம் என் எடுத்து வளர்க்கவேண்டும்? நமது நாகரீகத்திற்கு இது ஒத்தது அல்ல'' என்பது மற்ருெரு சாரார் விவாதம்.

முதலாவதாக, சினிமா ஒழுக்கத்தைக் கெடுத்து விடுகிறது என்று கூறும் நண்பர்கள் தொகை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இவர்கள் ஓர் முக்கிய விஷயத்தைக் கவனிக்கவேண்டும். சினிமாத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் தனிப்பட்ட ஹோதாவில் அரிச்சந்திரர்களா யிருக்கலாம். அல்லது கம்ஸர்களாயிருக்கலாம், சாவித்திரிகளா யிருக்கலாம், அல்லது சூர்ப்பனகைகளாயிருக்கலாம். அதற்காக வேண்டி சினிமாவையே தொலைக்க வேண்டும் என்பது பொருத்தமா?

இந்த சந்தர்ப்பத்தில் காங்கிரஸ்பேரில் போடப்பட்ட ஒரு குற்றச் சாட்டுக்கு காந்திஜி கூறிய பதிலை நாம் நினைவு கூர்வோம் சில கனவான்கள் "ஹூம்! காங்கிரஸா அது ஒரு வகுப்பு வாத ஸ்தாபனம்!'' என்று குறை கூறினுர்கள். அதற்கு காந்திஜி சொன்ஞர். "அப்படியா? இருக்கலாம். நீங்கள் காங்கிரஸில் சேர்ந்து அதைத் தூய்மைப் படுத்துங்களேன்.''

இந்த உவமை எவ்வளவு தூரம் பொருத்தமா யிருந்தாலும் சரி, ஒரே ஒரு விஷயம் மட்டும் தெளிவாகிறது. சினிமாத் தொழில் ஒழுக்கத்தைக் கெடுக்கிறதென்ருல் ஸ்திரீ தர்மத்தைக் குலைக்கிறதென்ருல், ஒழுக்கத்திலும் அறிவிலும் சிறந்த நண்பர்கள் சினிமாத் தொழிலில் ஈடுபட்டு அதை பரிசுத்தம் செய்யவேண்டும்.

ஒழுக்கத்திலும் திறமையிலும் உயர்ந்த பல கனவான்களை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. ஜன சேவையிலும் தூய்மையிலும் நிகரற்ற பல பெண் தலைவர்களை நாம் கிடைக்கப் பெற்றிருக்கிருேம். இவர்களெல்லாம் சேர்ந்து ஒரு நல்ல ஸ்டுடியோவை ஏற்படுத்தி எப்படி சினிமாத் தொழிலை நடத்த வேண்டும் என்பதற்கு வழிகாட்டிகளாகவும் உன்னத உதாரணமாகவும் இருக்கலாமல்லவா?

சினிமா விரோதிகள் சொல்லும் இரண்டாவது காரணத்திற்கு மிகுந்த முக்கியத்வம் கொடுக்கவேண்டும் சினிமா மேனுட்டிலிருந்து வந்த விஷயம்தான். அதற்காக அது நமது நாகரீகத்திற்குப் பொருந்தாது என்று சொல்வது சினிமாவை விட மேனுட்டின் மீது சிலருக்கு இருக்கும் வெறுப்பைத் தான் குறிக்கிறது. மேனுட்டிலிருந்து விரும்பத்தகாத அம்சங்களை நாம் எடுத்துக்கொள்ள வேண்டாம். நல்ல அம்சங்களை என் எடுத்துக் கொள்ளக்கூடாது?

சினிமா ஒரு நல்ல அம்சமா? நமது கலைக்கு அதனுல் உபயோகமுண்டா? என்பது அடுத்த கேள்வி. சினிமா என்பது சாஸ்திர முன்னேற்றப் பொய்கையின் மணமிக்க மலர். நாம் மேனுட்டு சாஸ்திர ஆராய்ச்சியின் விளைவான மின்சாரத்தையும் கப்பல்களையும், புகைவண்டிகளையும் உபயோகிக்கும்போது, நமது கலையை வளர்க்க, நமது நாகரீகத்தைப் பரப்ப, என் சினிமாவை உபயோகித்துக் கொள்ளக்கூடாது?